இலவசப் பிரதி

Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(சி-540)

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 13 (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :137

# கிளாலிக்குள் ஊடுருவிய 3 படையினர்

# கிரனேட் வீசி தாக்குதல் நடத்த முயற்சி!

## பெண் போராளிகள் திருப்பித் தாக்கியதில் சிப்பாய் ஒருவர் பலி; இருவர் தப்பியோட்டம்

(கிளிநொச்சி)

**கிளாலிப் பகுதிக்கு அண்மையாக - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்து மறைந்திருந்த மூன்று இராணுவத்தினர் - அப்பகுதிக்கு வந்த பெண் போராளிகளைக் கண்டதும் தமது பகுதிக்குள் ஓட முயன்ற வேளை போராளிகள் கைகளை உயர்த்துமாறு கோரினர். ஆனாலும் இரு படையினர் ஓடிச்செல்ல மற்றவர் கைக்குண்டொன்றை வீசமுற்பட்டபோது போராளிகள் திருப்பித் தாக்கியதில் அவர் பலியானார்.**

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் கிளாலிப் பகுதிக்கு அண்மையாக அமைந்துள்ள புலிகளின் முன்னணிக் காப்பரண் பகுதியில் உள்ள தமது காப்பரணுக்கு விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் திரும்பிக் கொண்டிருந்தபோது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் உள்நுழைந்து மறைந்திருந்த மூன்று இராணுவத்தினர் பெண்போராளிகளைக் கண்டவுடன் சூனியப் பிரதேசத்தை நோக்கி ஓடத்தொடங்கினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சம்பவத்தை கண்டித்து கிளிநொச்சியிலும் நேற்றுப் பேரணி



(கிளிநொச்சி)

மானிப்பாயில், படையினரும், ஈ.பி.டி.பியினரும் விடுதலைப் புலிகளின் எட்டுப் பெண் போராளிகள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து, நேற்று கிளிநொச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனப் பேரணியை நடத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்றலிலிருந்தும், சந்திரன் பூங்கா சந்தியில் இருந்தும் பேரணிகள் ஆரம்பமாகின.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் எழுச்சிப் பேரவையினால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருமளவு பெண்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## முகமாலையில் படையினரின் சோதனை நடவடிக்கை தீவிரம்

முகமாலை சோதனைச் சாவடியில் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்திலிருந்து வருவோர் புலனாய்வுப் பிரிவினரால் துருவித்துருவி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், கொண்டுவரும் பொதிகள் மீதான சோதனையும் உடற்பரிசோதனைகளும் அதிகரித்துள்ளன.

வாகனங்களில் செல்லும் அரச திணைக்களத் தலைவர்கள் இறக்கப்பட்டு கடும் சோதனைக்குட்படுத்தப் படுவதுடன், கொண்டுசெல்லும் பொதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதியையும் ஊடுருவிப் பாக்க வெளிக்கிட்டிட்டினமோ....?

## 2 பெண் போராளிகள் சாம்பல்தீவில் கைது!

### திருமலையில் நாளை ஹர்த்தால்

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவுப் பகுதியில் இரண்டு பெண் போராளிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து, நாளை திருமலையில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றித் திருமலை மாவட்டப் பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சாம்பல்தீவுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் இரு பெண் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான பேச்சுக்கள் முன்னேற அனைவரும் ஒத்துழையுங்கள்!

### ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி

(கொழும்பு)

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை இக்கட்டான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பாதிப்பு எதுவும் இல்லாமல் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுக்கள் முன்னேறப் பாதையில் செல்ல வேண்டுமாயின், இவ்விடயத்தில் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று, இலங்கைக்கான ஜப்பானிய அரசின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, ரோக்கியோவில் யூன் மாதத்தில் நடைபெறவிருக்கும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்திற்கு ஜப்பானிய பிரதம மந்திரி தலைமை தாங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு ஜப்பானிய பிரதம மந்திரி தலைமை வகிப்பது இதுவே முதற்தடவையாகும்.

## அரசியல் தீர்வில் அக்கறை காட்டினால் புலிகள் மீதான தடை நீக்கப்படலாம்!

### வொஷிங்ரனில் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் உரை

வன்முறைக்கு முடிவுகட்டி அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் தமக்குள்ள அக்கறையை விடுதலைப் புலிகள் நிரூபித்தால், புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தும்.

அத்துடன், விடுதலைப் புலிகள் தமது தீவிரவாதப் போக்கினைக் கைவிடுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அமெரிக்கப் பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். ( 2 ஆம் பக்கம் பார்க்க)

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

#### இன்றைய ஆட்டங்கள்

| | |
|---|---|
| தென்னாபிரிக்கா Vs நியூசிலாந்து | - The Wanderers, Johannesburg - 2 p.m. |
| இங்கிலாந்து Vs நெதர்லாந்து | - Buffalo park, East London- 2 p.m. |
| பாகிஸ்தான் Vs நமீபியா | - De Beers Diamond Oval, Kimberley -2 p.m. |

SERENDIB AIRLINE யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

(சி-518) 021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

# நெடுமாறன் உட்பட நால்வருக்கு குற்றப் பத்திரிகைகள் கையளிப்பு!



விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நெடுமாறன் உள்ளிட்ட நால்வருக்கும் பொலிஸார் குற்றப்பத்திரிகைகளைக் கையளித்துள்ளனா.

சென்னை பொடா நீதிமன்றத்தில் நடந்த விசாரணைகளின்போதே இக் குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன. பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், மருத்துவர் தாயப்பன், விடுதலை இராஜேந்திரன் ஆகியோருக்கு எதிராகவே குற்றப் பத்திரிகைகள் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள் மீதான விசாரணைகளை மார்ச் 5ஆம் திகதிவரை நீதிமன்றம் ஒத்திவைத்திருக்கிறது.

இதேவேளை, விடுதலைப்புலிகளுகளுகு ஆதரவாகப் பேசியதாக சாகுல் ஹமீத் என்பவரைக் கைது செய்யத் தமிழகப் பொலிஸார் தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர். இவரைக் கைது செய்வதற்கான பிடியாணையை சென்னை பொடா நீதிமன்றம் பொலிஸாருக்கு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நூலகத்திறப்பு ஒத்திவைப்பு பொ.ஐ.மு கடும் அதிருப்தி!

யாழ்.பொதுநூலகத்திறப்பு விழா ஒத்தி வைக்கப்பட்டமைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அதிருப்தி தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக நேற்றுமுன் தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

1981ஆம் ஆண்டில் நூலகத்தை எரித்த ஐக்கிய தேசியக் கட்சி, அதை மீளத் திறக்காமல் தடுத்தமை இன்னொரு முறை அதை எரித்ததற்குச் சமனாகும்.

அரசாங்கம் புலிகளுடன் இணைந்து நூலகத்தைத் திறக்க விடாமல் தடுத்துவிட்டதாகவும் பொ.ஐ.மு. முக்கியஸ்தரான மங்கள சமரவீர தெரிவித்தார்.

(க)




## ஸ்கிறீன் பிறிண்டிங் செய்முறை பயிற்சி வகுப்புகள்

ஓர் அரிய சந்தர்ப்பம்!

**CAREER . Com INSTITUTE**

தென் தமிழகத்திலிருந்து அச்சுக்கலை நிபுணர் R.பரதன D.P.Tech வருகைதந்துள்ளார். பிரிவு 11 இற்கான வகுப்புக்கள் 18.02.2003 செவ்வாய் ஆரம்பமாக உள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

T. P 0777-706334

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
- இணைப்பாளர்

"ART DOES NOT MAKE THE MAN - THE MAN MAKES ART"

(சி/596)


## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந் தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப 3 மணிக்கு நண்பர்கள் விளையாட்டு அரங்கில் நடைபெறும். (ச)

## 26 பாடசாலைகள் திறப்பு

(சரசாலை)

'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த வவுனியா வடக்கு நெடுங்கேணி கோட்டத்தில் இயங்கிய 42 பாடசாலைகளில் தற்போது 26 பாடசாலைகள் மீளவும் சொந்த இடத்தில் இயங்கிவருகின்றன என நெடுங்கேணி கோட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

(34)

# இன்றைய நாள் இனிய நாள்

**16-02-2003 - ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | பணவரவு, பூமி வாகனம் இவற்றால் லாபம், தன தானிய விருத்தி, குடும்பசுகம். |
| இடபம் | :- | காரிய விக்கினம், வயிற்றில் ரோகம், இலட்சுமிகரம், குடும்ப சந்தோசம். |
| மிதுனம் | :- | வாக்கு கலகம், தொழில் சிறப்பு, பெண்களால் செலவு, நற்கீர்த்தி. |
| கர்க்கடகம் | :- | அதிக பிரயாசை, பொதுசன மதிப்பு, காரிய விக்கினம், பொருள் இழப்பு. |
| சிங்கம் | :- | காரியனுகூலம், இனசன விரோதம், சௌக்கியம், வாகன லாபம். |
| கன்னி | :- | பகைவரால் தொல்லை, புதிய ஸ்தானம், வாக்கு வசீகரம், பொருட்பேறு. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | | |
|---|---|---|
| துலாம் | :- | காரிய விக்கினம், தேகசுகக் குறைவு, அதிக பிரயாசை, சொற்ப நன்மை. |
| விருச்சிகம் | :- | சினேகிகரால் கஷ்டம், பொருட் செலவு, பெண்களால் நன்மை. |
| தனு | :- | காரிய சித்தி, உயர்ந்த நிலை, இரத்தக் காயம், இனசன விரோதம். |
| மகரம் | :- | தனதானிய நிறைவு, ஆரோக்கியம், சத்துரு வெற்றி, களஸ்திரசுகம். |
| கும்பம் | :- | கோப மிகுதி, விபத்துக்கள், தொழில் சிறப்பு, பணவரவு, நற்கீர்த்தி. |
| மீனம் | :- | காரிய சித்தி, மன மகிழ்ச்சி, அதிக லாபம், பொருள் விருத்தி. |


## சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு தேவை

எமது நிறுவனத்தின் உத்தியோகஸ்தர் தங்குவதற்கு நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: புறோமோட்டேர்ஸ் எஞ்சினியரிங் கம்பனி, இல.844, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி/595)


# அரசியல் தீர்வில் அக்கறை...

இலங்கையில் அமைதிக்கான வாய்ப்புக்கள் என்ற தலைப்பில் வோஷிங்ரனில் உள்ள சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் உரையாற்றும்போதே ஆர்மிரேஜ் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கு முக்கியமான பொருளாதார உதவிகளையும், மனிதாபிமான உதவிகளையும் வழங்குவது குறித்து அமெரிக்கா அறிவிக்கும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் அமெரிக்காவின் பங்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில், இலங்கையில் பல்லின சமுதாயம் வாழும் ஜனநாயகத்தை உருவாக்கவும் ஆண்டாண்டு காலமாக அழிவையும் உயிரிழப்பையும் ஏற்படுத்தி வந்த யுத்தத்தை நிறுத்தவும் இச்சந்தர்ப்பத்தை அமெரிக்கா பயன்படுத்துகிறது.

இலங்கை, அமெரிக்காவின் ஒரு வர்த்தகப் பங்காளி. எம்மால் இயன்றவரை ஆளணி, பொருளாதார முறைகளைப் பயன்படுத்தி ஒரு தீர்வைக் காணலாம் என அமெரிக்கா நம்புகிறது.

20 வருடங்களாக நடக்கும் யுத்தத்திற்கு முடிவுகட்டி - ஒரு தீர்வை நோக்கி அரசும் புலிகளும் செயற்படுகின்றனர். எனவே, தார்மீகரீதியிலும் தீர்வுக்கு உதவி செய்யவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளது.

இதன்மூலம் 20 வருடங்களாக மனித அவலங்கள் நிகழும் இத்தீவில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம். இது யுத்தத்தால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருபபவர்களை அதிலிருநது மீட்பதற்கும், பயங்கரவாதம், மனித உரிமை மீறல் தடுப்புக்களுக்கும் உதவுவதாக அமையும்.

அழிவிலிருந்து எவ்வாறு நம்பிக்கைக்குச் செல்லமுடியும் என்பதற்கு இலங்கை உதாரணமாக மாறியிருக்கிறது. இலங்கைப் பிரச்சினைக்கு அமெரிக்கா உட்பட்ட சர்வதேசசமூகம் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கமுடியும்.

நான் யாழ்ப்பாணத்திற்குச் சென்று இறங்கியபோது, ஆயிரக்கணக்கான குண்டுகளாலும், ஷெல்களாலும் அழிந்த நிலப்பகுதிகளைப் பார்த்தேன்.

இந்த அழிவுகளைப் பார்த்தபோது வியட்னாம் யுத்தத்தின் அனுபவ நினைவுகள் வலுவாக ஏற்பட்டன. வியட்னாமைப் போன்ற யுத்த அழிவுகளை இலங்கையில் மீண்டும் பார்ப்பேன என நினைத்திருக்கவில்லை.

வட-கிழக்குப் பகுதிகளில் இடம் பெயர்ந்து சென்ற மூன்று இலட்சம் மக்கள் மீளத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு சுகாதார, குடிநீர், அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை.

அங்குள்ள மக்களுடன் பேசியபோது, நம்பிக்கையும் கவலையும் சேர்ந்த தொனியில் உரையாடினர். அங்கே யுத்தம் தவிர வேறேதும் தெரியாத சமூகம் ஒன்று உருவாகியிருந்தது.

இப்போது ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த மாற்றத்திலிருந்துதான் தீர்வு ஆரம்பமானது.

சமாதானப் பேச்சுக்களில் உள்ள முன்னேற்றத்தை மக்களிடம் எடுத்துச் சொல்வதே அரசுக்கும் புலிகளுக்கும் உள்ள முக்கியமான அவாவாகும். மக்களை அமைதி முயற்சிக்குள் கொண்டு வந்து தேசியப் பங்கேற்பை ஏற்படுத்த வேண்டியது இவர்களின் கடமை.

இந்த விடயங்களை இவ்விருவரும் நன்கு கையாண்டு வருகின்றனர். அத்துடன் அரசும் புலிகளும் சமாதானத்துக்கு உறுதியான அடித்தளத்தை இட்டிருக்கிறார்கள். புரிந்துணர்வு உடன்படிக்கை இந்த நம்பிக்கைக்கா... அடித்தளத்தை இட்டிருக்கின்றது.

இந்த நம்பிக்கை சிதறடிக்கப்படடால் மிகப்பெரிய அழிவுகள் ஏற்படும். இதனால் இந்த அமைதியை இருதரப்பும் மதிக்கவும் பாதுகாக்கவும் முயற்சி எடுத்தாக வேண்டும்.

நடந்து முடிந்த பேச்சுக்களில அரசும் புலிகளும் உள்ளக சுயநிர்ணய சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணமுடிவு செய்திருப்பது நல்லதொரு கட்டம்.

அத்துடன் பேர்ளின் பேச்சுக்களின் போது, மனித உரிமை, மனிதாபிமான விடயங்கள், சிறுவர் ஆட்சேர்ப்பு போன்ற விடயங்களை நோக்கி பேச்சுக்கள் நகர்த்தப்பட்டமை. இலங்கையின அமைதி முயற்சிகளை மிகவும் ஊக்கப்படுத்தியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் - இப்படி விரைவான மாற்றங்கள் நிகழும் என்று எவரும் நம்பியிருக்க மாட்டார்கள்.

இனிமேல்தான் சிக்கலான விடயங்கள் பற்றிப் பேசப்படவுள்ளன. இரண்டு தரப்புக்களும் உறுதியான நிலையில் தற்துணிவுடன் பேசி உண்மையான இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டிய கட்டம் இது.

பேச்சுக்கள் நடக்கும்போது புலிகளால் ஆயுத ட்ரோலர் வெடிக்க வைக்கப்பட்டமை அமைதிப்பேச்சுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது சமாதான முயற்சிகளையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் இருக்கின்ற சிங்கள, முஸ்லிம் மக்களின் உரிமைகளை மதிக்க வேண்டும். ஜனநாயக சமூக அமைப்பில், சமஷ்டிக் கூட்டமைப்பை விரும்புகின்றவர்களாக இருந்தால் பல கருத்துக்களையும் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமெரிகா தனிநாட்டு நிலைப்பாடடையோ, தனிநாட்டுக்கான பயங்கரவாதத்தையோ அனுமதிக்காது.

அதேவேளை, இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு சட்டரீதியான உரிமைகளை வழங்கவேண்டும். இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவும், சுமுகமான வாழ்க்கை நிலையை ஏற்படுத்தவும், சுதந்திரமாக மீன்பிடித்தொழிலைச் செய்ய அனுமதிக்கவும் வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு இலங்கை அரசையே சாரும்.

என ஆர்மிரேஜ் மேலும் தனது உரையில் குறிப்பிட்டார்.


# சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய மகாநாடு

**சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிராந்தியங்கள் 9ம், 10ம் இணைந்து நடாத்தும் பிராந்திய மகாநாடு.**

திகதி - 16.02.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 10.00 மணி (பு.நே)
இடம் - யாழ்.மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர் - லயன் ஓ.றீகன் பிஞ்சி அவர்கள் (சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய கவர்னர்)
சிறப்பு விருந்தினர் - லயன் K.தில்லைநாதன் அவர்கள் (முன்னாள் கவர்னர்)

ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்

இம்மகாநாட்டின் முக்கிய குறிக்கோள், லயன்ஸ் கழகங்கள் ஊடாக சமாதானமும் அமைதியும் ஏற்படுத்துதல் என்பதாகும்.

லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், சீமாட்டிகள், லியோக் கழக உறுப்பினர்கள், அபிமானிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

லயன் த.சற்குணராசா,
பிராந்தியத் தலைவர்,
பிராந்தியம் 9.

லயன் Dr.எம்.கதிர்காமநாதன்,
பிராந்தியத் தலைவர்,
பிராந்தியம் 10.

(சி/593)



# பணிநிலை வேண்டுகை

## ஆங்கில மொழிபெயர்ப்பாளர் பணிநிலைக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் எதிர்பார்க்கப்படுகின்றது

| | | |
|---|---|---|
| அகவை | :- | வரையறுக்கப்படவில்லை |
| பால் | :- | ஆண்கள் மட்டும் |
| ஊதியம் | :- | தகுதிநிலைக்கேற்ப தகுந்த ஊதியம் வழங்கப்படும். |
| பணிபுரியும் இடம் | :- | கிளிநொச்சி (தங்குமிட வசதி செய்து தரப்படும்) |

**விண்ணப்ப முடிவு திகதி :- 28.02.2003**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

"ஆங்கில மொழிபெயர்ப்பாளர் பணிநிலை வேண்டுகை"
C/O அறிவமுது புத்தகசாலை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி/594)

## கற்பித்தல் பயிற்சி மேற்பார்வையாளருக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் - யாழ்.பிராந்திய நிலையத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா - மாணவர்களுக்கான கற்பித்தற் பயிற்சியை மேற்பார்வை செய்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு 50 முதன்மை ஆசிரியர்கள் தேவைப்படுவதாகவும் பட்டமேற்கல்வி டிப்ளோமா முடித்தவர்கள், மற்றும் கற்பித்தற் பயிற்சியில் "பி" தரம் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும், விண்ணப்பப்படிவங்களை பிறவுண் வீதி, கொக்குவிலிலுள்ள பிராந்திய நிலையத்தில் பெற்றுப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் பிராந்திய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

# இனப் பிரச்சினைத் தீர்வில் பொ.ஐ.மு.-ஜே.வி.பி. இணக்கம்

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் - ஜே.வி.பியும் ஆரம்ப -இணக்கத்தை எட்டியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதை ஏற்றுக் கொண்டபோதிலும், இதுதொடர்பான மேலதிக விளக்கங்களை அவர் வழங்கவில்லை.

தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்த இரண்டு கட்சிப் பிரதிநிதிகளும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து உரையாடினர்.

இதன்போது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பெரும்பாலான விடயங்களில் தமக்குள் இணக்கம் ஏற்பட்டதாக விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியற் சூழ்நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றைப் பற்றி இரண்டு தரப்புமே தமது இணக்கத்தை வெளியிடவில்லை.

அண்மையில் இரண்டு கட்சிகளும் தேசிய அரசாங்கம் என்ற அடிப்படையில் செயற்படவிருப்பதாக வெளியான தகவல், இரு கட்சிகளுக்குமிடையே இணக்கப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் நோக்கம் கொண்டதென நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இரண்டு தரப்புகளும் ஏற்றுக்கொண்டன.

இந்தநிலையில், தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இறுதித் தீர்மானத்துக்கான பேச்சுவார்த்தை ஒன்றை அடுத்த வாரத்தில் நடத்துவது எனவும், இரண்டு கட்சிகளும் இச்சந்திப்பில் முடிவெடுத்துள்ளன.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் டி.எம். ஜயரட்ன தலைமையிலும், ஜே.வி.பி பிரதிநிதிகள் ரில்வின் சில்வாவின் தலைமையிலும் பங்கேற்றனர். ஜனாதிபதி சந்திரிகா இந்தச்சந்திப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# நிதிக் கையாள்கை விவகாரம் அடுத்த பேச்சுக்களில் ஆராய்வு

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

அதிகாரப்பரவலாக்கலில் நிதியைக் கையாள்வது குறித்து அடுத்தகட்டப் பேச்சுக்களில் ஆராயப்படவிருப்பதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

புலிகளும்-அரசும் அரசியல் விவகாரங்களை ஆராய்வதற்காக உறுதியான அடித்தளத்தை இட்டுள்ளார்கள். பொருளாதார முறைமைகளை எவ்வாறு பரவலாக்கிக் கொள்வது என்பது குறித்து விரைவில் ஆராயப்படவுள்ளது.

புலிகள் தற்போது சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளின் நிதிப்பிரமாண முறைகள் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். பேர்ளினில் புலிகள் சமஷ்டி முறையில் நிதியைக் கையாள்வது தொடர்பாக ஆராய்ந்து வந்துள்ளனர். இதன்மூலம் அதிகாரப்பரவலாக்கலில் முக்கிய பகுதிகளைத் தொட்டுச்செல்ல இருக்கிறோம்.



பேர்ளினில் நடைபெற்ற பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# அரச ஊழியர்கள் திருப்தியான சேவையை வழங்குகின்றனரா?

## கண்டுபிடிக்க விசேட சோதனைகள்

அரசாங்க ஊழியர்கள் அலுவலகங்களில் திருப்திகரமாகச் சேவையாற்றுகின்றார்களா என்பதைக் கண்டறிவதற்கான திடீர்ச் சோதனைகளை நடத்துவதற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அலுவலகத்துக்கு வரும் ஊழியர்கள் சரியான முறையில் பணியாற்றுகிறார்களா என்பதைக் கண்டறியவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தரவையடுதது, நேற்றுமுன்தினம் மாத்தளை பிரதேச செயலகத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது பல ஊழியர்கள் வரவுப் பதிவேட்டில் ஒப்பமிட்டுவிட்டு வெளியில் சென்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், இதேபகுதியில் பல கிராம அலுவலர்கள் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதில்லை எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

திடீர்ச் சோதனைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட உயரதிகாரிகளைக் கொண்ட குழு நாடு முழுவதும் சோதனைகளை நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# விசாகப் பட்டினத்தில் தளம் அமைக்க புலிகள் முயற்சி செய்கிறார்களாம்!

## இந்திய புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆந்திரா மாநிலம் - விசாகப்பட்டினத்தில் விடுதலைப் புலிகள் தளம் ஒன்றை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக இந்தியப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக 'நியூ இன்ட் பிறஸ்' இணையசேவை தெரிவித்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் தளம் அமைப்பதற்காகப் புலிகளின் இரகசியச் செயற்பாட்டாளர்களும், அனுதாபிகளும் இப்பகுதிக்கு அடிக்கடி சென்றுவருவதாகவும், அண்மையில் கூட 'ஹௌரா மெயில்' ரயிலில் வந்த மூன்று பேர் இப்பகுதியில் தங்கியிருந்ததாகவும் அச்செய்தியில் கூறப்பட்டிருக்கின்றது.

இவர்கள் மூவரும் விசாகப்பட்டினம் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கடல்வழிப் போக்குவரத்துக்கு விசாகப்பட்டினம் முக்கியமான தளமாக இருக்கும் எனவும், ஆயுதக்கடத்தல்களுக்கு வாய்ப்பானது என்றும் புலனாய்வுத் துறையினர் கூறியிருப்பதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு நக்ஸலைட்கள் மற்றும் நேபாளப் போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகவும், நேபாளப் போராளிகள், கிழக்குக் கோதாவாரி, விசாகப்பட்டினம், பீகார், ஜார்க்கன்ட் ஊடாக நேபாளத்தின் தண்டகாரணிய காட்டுப் பகுதிக்குச் சென்று வருவதற்கான பாதையைக் கொண்டிருப்பதாகவும் புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை - மேற்கு, கிழக்கு கோதாவாரி மாவட்டங்களிலுள்ள மக்கள் போர்க் குழு முக்கியஸ்தர்கள், புலிகளைச் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இப்பகுதியில் மீன்பிடி வள்ளங்களை வாங்கிவருவதாகவும், இவற்றில் 5000 முதல் 15000 வரையான லீற்றர் பெற்றோலை ஏற்றிச்செல்லமுடியும் எனவும், புலனாய்வுத் தகவல்களை ஆதாரம்காட்டி அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் கொழும்பில் அமெரிக்காவுக்கு எதிராக ஜே.வி.பியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி.

# மானிப்பாய் சம்பவத்தை விசாரிக்க இராணுவ விசாரணைக் குழு!

மானிப்பாயில் பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக இராணுவத் தளபதி - விசாரணைக் குழுவொன்றை நியமித்திருப்பதாகத் தெரியவருகின்றது. இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன தலைமையிலான குழுவே இவ்விசாரணைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இராணுவத்தினருக்கு அரச காணிகள் இரண்டு மாதங்களில் வழங்கப்படும்!

இராணுவத்தினருக்கு அரச காணிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இரண்டு மாதங்களுக்குள் இராணுவத்தினருக்குக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

முதற்கட்டமாகப் போர்முனைப் பகுதிகளாக இருந்த பிரதேசங்களில் கடமையாற்றும் படையினருக்கும், யுத்தத்தில் அங்கவீனமான படையினருக்கும், இறந்த படையினரின் குடும்பத்தினருக்கும் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இராணுவத்தினரின் நிரந்தர வசிப்பிடங்களுக்கு அண்மையிலேயே இவர்களுக்கான காணிகள் ஒதுக்கப்படும். காணியின் பெறுமதியில் 10 சதவீதம் உடன் செலுத்த வேண்டும் என்றும், மீதியை 30 வருடகாலங்களில் செலுத்தமுடியும் வருடகாலங்களில் செலுத்தமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நடந்த கூட்டத்தில் இராணுவத் தளபதி, பிராந்தியத் தளபதிகள் மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(க)

# தொண்டர் ஆசிரியர் போராட்டம் முடிவு; அமைச்சர்களிடையே முறுகல் ஆரம்பம்!

தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டமை தொடர்பாக அமைச்சர்கள் இருவருக்கிடையில் முறுகல் நிலை தோன்றியிருக்கின்றது.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம்கோரி இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக சுமார் 150 நாட்களாகச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதனையடுத்து இந்தப் போராட்டம் சாகும்வரை உண்ணாவிரதமாக மாற்றப்பட்டது. இந்தநிலையில் பிரதமரின் உத்தரவுக்கிணங்க, பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்தன உறுதிமொழிகளை வழங்கி உணணாவிரத்தை முடித்து வைத்தார்.

இந்தச் செய்தி ஊடகங்களின் மூலம் பிரசாரப்படுத்தப்பட்டமை, கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கருணாசேன கொடித்துவக்குவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் வஜிர அபேவர்தன தாமாகவே இச்செய்தியைப் பிரசாரப்படுத்தியமை தமக்கு ஆசிரியர்களின் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு- பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். (01)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3.30 மணிக்கு சங்கத் தலைவர் மு. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் சி.சிவேந்திரன் அறிவித்துள்ளார்.

# யுத்தத்துக்கு தயாராகும் அரச படைகளால் அமைதிக்கான வாய்ப்புக்கள் பாதிப்பு!

## திருமலை தமிழ்ப் பிரமுகர்கள் அகாஷியிடம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தபோது, அவரை அங்குள்ள முக்கிய தமிழ்ப் பிரமுகர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.





திருகோணமலையில் அகாஷியைச் சந்தித்த தமிழ்ப் பிரமுகர்கள்.

இதன்போது தமிழ்ப் பிரமுகர்கள், அரசபடைகள் அமைதிக்கான வாய்ப்புக்களைப் புறக்கணித்து யுத்தத்துக்குத் தயார்படுத்தும் வகையில் நடந்துவருவது அமைதி முயற்சியைப் பாதித்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 204 வருடங்களாகச் சிவில் நிர்வாகம் நடைபெற்று வருகின்றபோதும், திருகோணமலையில் ஒரு தமிழராவது அரச அதிபராக நியமிக்கப்படவில்லை. 70 சதவீத தமிழ்பேசும் மக்கள் வாழும் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டும், அவர் ஒருவாரமே பதவியில் இருக்க முடிந்தது எனவும் தமிழ்ப் பிரமுகர்கள் அகாஷியிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், சட்டத்தரணி சிவபாலன், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் தவசிலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிலாவெளி - கோபாலபுரத்தில் புதிதாகக் கடற்படையினர் அமைதது வரும் முகாமையும் அகாஷி சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி இறுதியாட்டம்



"வை.அர்ஜன்" ஞாபகார்த்தமாக லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 2.30 மணிக்கு ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. கழகத்தலைவர் ம. தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் - பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

# இலவசப் பாடநூல் விநியோகம் தாமதத்துக்கு கல்விமைச்சே காரணம்

## விசாரணைக்குழு குற்றச்சாட்டு

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடநூல் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதங்களுக்குக் கல்வி அமைச்சே காரணம் என்று - இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரதமரின் செயலாளர் கே.எச். ஜே.விஜேதாஸ தலைமையிலான இந்தக் குழு மேலும் தெரிவித்திருப்பதாவது -

ஆண்டு 5 இற்குரிய ஆங்கிலப் பாடப்புத்தகத்தைத் தவிர ஏனைய பாடநூல்கள் அனைத்தும் உரிய காலத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆனால், கல்வி அமைச்சின் அசமந்தப் போக்கினாலேயே மாணவர்களுக்கு இவற்றை விநியோகிக்கத் தாமதமானது எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் 41 கல்வி வலயங்களில் கல்விகற்கும் 45 லட்சம் மாணவர்களுக்கும், வருடாந்தம் 38 மில்லியன் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படவேண்டியிருப்பதாக அந்தக் குழு தகவல் வெளியிட்டிருக்கிறது. (01)

## அரியாலையில் தமிழ் விழா

(சிறுப்பிட்டி)

அரியாலை சக்தி பண்ணிசை மன்றத்தின் தமிழ்விழா இன்று பி.ப. 3 மணிக்கு, மன்றத்தலைவர் பொ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், முன்னாள் மாநகரசபை முதல்வர் செ.கந்தையன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சைவ சமய அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று முற்பகல் 10 மணிக்கு குடாநாட்டில் உள்ள 17 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தரம் 3 முதல் தரம் 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த எழுத்துப் பரீட்சையில் சுமார் மூவாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெயர்ப்பலகை திரைநீக்கமும் மெய்வல்லுநர் போட்டியும்

சுன்னாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பெயர்ப்பலகைத் திரைநீக்கமும், வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்று பி.ப 2 மணிக்குப் பாடசாலை அதிபர் சி.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (96)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



பெயர் : ப.பிரிந்திகா
முகவரி: இராஜஸ்தலம், அல்வாய் தெற்கு

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 21

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### இரத்தச்சோகையை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகள், சிற்றுயிரிகள்

இவற்றைச் சிற்றுயிரிகள் நடமாடும் இடங்களில் தூவி, அவற்றினை உண்டு மயங்கும் சிற்றுயிரிகளை அள்ளி, கொதிநீரில் போட்டு அழிக்கலாம். இரசாயனப் பொருள் பூசிய சாம்பிராணிக் குச்சி போன்ற குச்சிகளும் விற்கப்படுகின்றன. இக்குச்சியிலுள்ள மருந்துகள் சிற்றுயிரிகளைக் கவர்ந்து மயங்கவைக்கும். இக்குச்சிகளின் ஒரு முனையில் கொழுக்கியொன்றும் இருப்பதால் இக்குச்சியைத் தொங்கவிடவும் முடியும். இவை பற்றிய மேலதிக விபரங்களை விவசாய இரசாயனப் பொருள் தயாரிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு அறியலாம்.

சிறுவர்கள் வெளியிடங்களில் விளையாடும்போது நுளம்புக் கடியைத் தவிர்ப்பதற்காக இலத்திரனியல் தொழில்நுட்பத்தால், 'பென்டோச் பட்டரிகளில்' இயங்கும் நுளம்பு துரத்திகள் (**MOSQUITO REPELLENTS**) பயன்படுத்தப்படுகின்றன. இச்சிறு கருவியைச் சிறுவர்களின் உடையில் கொழுவிவிட்டால், இக்கருவி மனிதரின் காதுகளால் கேட்கமுடியாத அதிர்வெண்களில் ஓர் ஒலியை எழுப்பும். இந்த ஒலி நுளம்புகளைப் பயமுறுத்தும். நுளம்புகள் விலகிச் சென்றுவிடும். நுளம்புகள் விரும்பாத மணத்தைக்கொண்ட திரவங்கள், களிம்புகள், கரைசல்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை உடலில் பூசியிருந்தால் நுளம்புகள் கிட்டவரா.

### மூன்று வகையான பேன்களின் தொல்லை

தலைப்பேன், உடற்பேன், நண்டுப்பேன் என்ற மூன்று வகையான பேன்கள், மனிதரின் மயிர் செறிந்த பகுதிகளில் வாழ்ந்து தோலைத் துளைத்து, இரத்தத்தைக் குடிக்கும். இவை தோலைத் துளைக்கும்போதும், பேன்களின் கழிவுப்பொருட்கள் தோலுடன் தொடுகையுறும்போது ஏற்படும் ஒவ்வாமையாலும் சொறிவு ஏற்படும். சொறிவதால் உண்டாகும் புண்கள் நீரிழிவு நோயாளிகளுக்குப் பெரும் தொல்லையைக் கொடுக்கலாம். பேன்களின் வாழிடத்தையும், அவை தொற்றும் முறையையும் அறிந்திருந்தால் பேனினால் ஏற்படும் உபாதைகளைத் தடுக்கலாம். தலைப்பேன் தலைமயிரினிடையே வாழும். சனச்செறிவுமிக்க திருவிழாக்கள், பஸ் பிரயாணங்களின்போதும், கூந்தற் தூரிகை, சீப்பு, தலையணை போன்றவற்றின் மூலமும் தொற்றும். உடற்பேன் உடலின் பல்வேறு பகுதிகளிலும் வாழும். இவை படுக்கை விரிப்புகள், துவாய்கள், பிறர் உடைகள் போன்றவற்றின் மூலம் தொற்றும். நண்டுப் பேன்கள் ஜனன உறுப்புப்பகுதி மயிர்களிடையே வாழும். சில வேளைகளில் கமக்கட்டுமயிர், கண்மடல் மயிர் போன்ற இடங்களிலும் வாழும். பிறரது உடைகளை அணிதல், நெருக்கமான உடற்தொடர்பு போன்றவற்றால் தொற்றும். விளையாட்டுப் போட்டிகளின்போது, உயரம் பாய்தல், நீளம் பாய்தல், நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் ஒருவரது உடையை இன்னொருவர் பயன்படுத்தும்போது இப்பேன்கள் தொற்றுகின்றன. விளையாட்டுப் போட்டிகள் தொடராக இடம்பெறுவதால், பிறரது உடைகள் அணியப்படுவது தொடர்வதாலும், இப்பேன் தொற்றும் தொடர்கதையாக நீள்கிறது.

பேன்கடி ஏற்படுத்தும் சொறிவினால் புண்கள் ஏற்பட்டு நீரிழிவு நோயாளிகளுக்குத் தொல்லை தரலாம். கண்ணிமை போன்ற மென்மையான பகுதிகளில் மருந்துகள் பயன்படுத்த முடியாததால் மயிரை அகற்றி இப் பேன்தொல்லை ஒழிக்கப்படுகிறது.

### கட்டாக்காலி நாய் வளர்ப்பும் நீரிழிவு நோயாளரின் அவலமும்

சுகாதார முறைப்படி வாழும் மக்கள் மிகுந்த பிரதேசம், அறிவுமிக்கோர் வாழும் பிரதேசம், அயராத உழைப்பாளிகள் மிகுந்த பிரதேசம், கண்ணியமான மக்கள் வாழும் பிரதேசம், குற்றச்செயல்கள் குறைந்த பிரதேசம், ஆரோக்கியமான மக்கள் வாழும் பிரதேசம், போக்குவரத்து விதிகள் நன்கு கடைப்பிடிக்கப்படும் பிரதேசம் என்ற பெயரைப் பெற்றிருந்த யாழ்ப்பாணம் இன்று அந்தப் பெயர்களை யெல்லாம் இழந்து குப்பையும் நாய் மலமும் நிறைந்து, அடைபட்டு, நாறுகின்ற சாக்கடைக் கால்வாய்களுடனும், கட்டாக் காலி நாய்கள் மிகுந்த வீதிகளுடனும், போக்குவரத்து விதிகளை அப்பட்டமாக மீறி வாகனங்கள் செலுத்தப்படும் வீதிகள் நிறைந்ததாகவும் மாறியுள்ளது.

(தொடரும்)

# ரணில், அனுரா, விமல் ஒரேமேடையில் தோன்றலாம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 33 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அனுரா பண்டாரநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோர் ஒரேமேடையில் தோன்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிலிருந்து பாரதீய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

# இலங்கை அன்னாசிக்கு வெளிநாடுகளில் கிராக்கி

(கொழும்பு)

இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் அன்னாசி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தேயிலை, தேங்காய் என்பனவற்றுக்கு அடுத்ததாக அன்னாசிப்பழ ஏற்றுமதி இடம்பிடித்திருக்கின்றது.

இலங்கையில் 3000 நடுத்தர உற்பத்தியாளர்களும், 5000 சிறிய உற்பத்தியாளர்களும் அன்னாசிச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்கள் உற்பத்தி செய்யும் அன்னாசி உள்ளூர் தேவைக்கே போதியதாக இல்லை எனத் தெரியவருகின்றது.

அத்துடன், இலங்கையில் அன்னாசி உற்பத்தியாளர்களின் பயிர்ச் செய்கை முறையின் தராதரம் குறைவாக இருப்பதால் குறைந்த விளைச்சலையே பெறவேண்டியிருப்பதாக விவசாய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் சந்தைக்குப் போதுமானதாக அன்னாசி இல்லாவிட்டாலும், வெளிநாடுகளில் இலங்கை அன்னாசிக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியினால் அதிகளவில் ஏற்றுமதியாகி வருகின்றது.

உலகில் பிலிப்பைன்ஸ் நாட்டு அன்னாசிக்கே அதிக மதிப்பு இருந்து வருகின்றது. தற்போது அதற்கு நிகராக இலங்கை அன்னாசியும் புகழ் பெற்றிருக்கின்றது.

இதையடுத்து அரசாங்கம் கம்பஹா மாவட்டத்தில் அன்னாசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்கள் செய்து வருகின்றது.

இலங்கையிலிருந்து அன்னாசிப்பழங்கள் அதிகளவில் ஐரோப்பிய, மத்தியகிழக்கு நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# வாசமுள்ள மலரிது

சமிந்த வாஸ் என்பது இலங்கை ஹீரோவின் சுருக்கமான பெயர்தான். முழுப்பெயர் இதோ. மூச்சுவிடாமல் கதைக்கும் போட்டி என்றால் எங்கள் வாஸின் பெயரும் உபயோகமாக இருக்கும். வர்ணகுலசூரிய பாட்ட பெண்டிகே உஷாந்த ஜோஸப் சமிந்தவாஸ். இவர் ஒரு பாடகர் என்பதும், தனது சிறுவயதில் தான் ஒரு கத்தோலிக்கப் பாதிரியாராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டவர் என்பதும் இன்னுமிரு செய்திகள்.



1995 இல் நியூசிலாந்துச் சுற்றுப்பயணத்தின்போது ஒரு டெஸ்ட் போட்டியில் பத்து விக்கெட் பெற்ற முதல் இலங்கை வீரர் என்ற சாதனையை நிலை நாட்டினார். ஒருநாள் போட்டியொன்றின் சாதனையான சிம்பாவேக்கு எதிரான (08/19 - 2002) என்ற முத்திரையும் இவருக்கே உரியது. நீங்கள் ஆச்சரியத்துடன் அசைபோடும் தற்போதைய சாதனை இற்றை

ஆட்டத்தின் இரண்டாவது ஓவராகவே அமைந்திருந்தது. உலகக்கிண்ணப் போட்டி வரலாற்றில் பொதுவாக HATTRICK என்பது மூன்றாவது முறையானதாகும். முதலாவது சந்தர்ப்பம் 1987 இல் இந்திய வீரர் சேத்தன் சர்மா நியூசிலாந்துக்கு எதிராகச் சாதித்ததாகும். இரண்டாவது சந்தர்ப்பம் பாகிஸ்தானின் ஷக்லெயின் முஷ்டாக் லண்டன் ஓவலில் 1999 இல் சிம்பாப்வேக்கு எதிராகப் புரிந்து சாதனையாகும்.

இது ஒருபுறமிருக்க பங்களாதேஷ் தனது இரண்டு ஆட்டங்களிலும் இவ்வளவு மோசமாக விளையாடியிருக்கக்கூடாது என்பதே ரசிகர்களின் ஆதங்கம். இவர்கள் இனிச் சந்திக்க இருக்கும் அணிகள் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மேற்கிந்தியத்தீவுகள், கென்யா என்ன செய்யப்போகிறது பங்களாதேஷ்? இங்கே

# வசந்தத்தைப் பார்க்குது



சேத்தன் சர்மா.

வரையான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் ஆட்டத்தின் ஆரம்ப ஓவரின் முதல் மூன்று பந்துகளிலும் பெறப்பட்ட விக்கெட்டுகள் என்ற வகையில் முதல் சாதனைதான்.

1999 இல் ஹராரேயில் இலங்கை அணிவீரர் நுவான் சொய்சா டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது ஓவரில் மூன்று விக்கெட் சரித்தார். ஆனால் அது

ஒரு பனிப்போரும் காத்திருக்கிறது. கென்யாவைப் புறந்தள்ளிவிட்டு பங்களாதேஷுக்கு ICC யால் டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது. கென்யாவில் மிக அதிருப்தியுடனேயே பார்க்கப்பட்டது. இந்த நிலையில் பங்களாதேஷுக்கு ஒரு "சாத்துச்சாத்தினால்" தனது டெஸ்ட் அனுமதியின் விரைவுக்கு ஒரு சாதகமான சந்தர்ப்பமாக இருக்கும் என்று கென்யா நினைக்கக் கூடும். என்னதான்



முஷ்டாக்

இருந்தாலும், பங்களாதேஷின் நிலை எதிர்வரும் போட்டிகளில், பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகி விடக்கூடாது என்பது ரசிகர்களின் விருப்பம்.

இன்னொருபுறம் Toss வென்ற சனத், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி துடுப்பாட ஆரம்பித்து இன்னொரு சதம் இலகுவாகப் பெற்றிருக்கலாம். ஆனால், தனது வாய்ப்பைத் தானே இழந்து நிற்கிறார் என்று அவர் மீது அவரது யாழ்ப்பாண ரசிகர்களுக்கு அதீத கோபம். அவன் கனவான் அல்லவா. அணி முதல், தான் அதன் பின்னால் என்று யோசித்தாரோ என்னவோ?

- தென்றல்.




இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளிலும் CRICKET என்பது வெகுவாக விரும்பப்படுவதுதான் (CCC - CRICKET CRAZY CROWD). இப்போது இது தொடர்பில் இன்னொரு செய்தி. தமிழ்நாட்டில் சென்னை மாநகரில் அண்ணா நகரில் ஒரு நபர் கோயில் ஒன்று அமைத்துள்ளார். விநாயகரின் விக்கிரகத்தை

# விநாயகனே! விக்கெட் காப்பவனே!

வைத்துப் பூஜிக்கும் அவர், விநாயகரின் ஒருகையில் BAT AND BALL வைத்திருக்கிறார். தெய்வத்தின் பெயர் CRICKET GANESHA தான். கிரிக்கெட் கணேசாவைப் பூஜிக்கத்தொடங்கிய பின் இந்திய கிரிக்கெட் அணி பல வெற்றிகள் பெற்றது என்கிறார் இவர். 2001 இல் அவுஸ்திரேலியா - இந்தியா டெஸ்டில் வெல்லக் கிரிக்கெட் கணேசாவே காரணம் என்கிறார். இந்த விக்கிரகத்தின் தும்பிக்கை வலதுபுறம் சரிந்ததால், வலது கைத்துடுப்பாட்ட வீரர்கள் V.V.S.லக்ஸ்மனும், டிராவிட்டும் சென்சரி அடித்தார்கள் என்கிறார். நெதர்லாந்துக்கு (2003) எதிரான ஆட்டத்தில் இந்தியா வெல்ல, இடது கைத்துடுப்பாட்ட வீரர்களே காரணம் என்கிறார் (யுவராஜ் சிங் - தினேஸ் மொங்கியா). மேலும், இவர் இந்திய வீரர்கள் கிரிக்கெட் கணேசாவில் நம்பிக்கை வைத்துத் துதிக்க வேண்டும். செய்தால் தடைகள், விக்கினங்கள் நீக்கிப் பல வெற்றிகளைக் காட்டுவார் என்கிறார்.



வணக்கம் கணேசா.

கிரிக்கெட் கணேசாவைப் பூஜிக்க இவர் ஒரு மந்திரத்தையும் உருவாக்கியுள்ளார். எல்லாமே கிரிக்கெட் கணேசாவின் அருள் என்பவர் - சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கா எனும் பெண் தெய்வங்களின் ஆசியுடன் கிரிக்கெட் கணேசா எல்லாக் கிரிக்கெட் நலமும் தருவார் என்கிறார். மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம். இந்தக் கிரிக்கெட் கணேசாவைத் தோன்றியருளச் செய்திருப்பவர் தமிழ் நாட்டவர். எல்லாம் இன்பமயம்.

*- வீரசைவன்.*

# இழப்பின் துயரம் மிகப் பெரிது



வோர்ண்

**ஷே**ன் வோர்ண் என்ற பெயருக்கு அறிமுகம் தேவையில்லை. அவர் பற்றிய அண்மைய செய்திகளும், அவர் தாயகம் திரும்பியதும் புதிய செய்திகள் அல்ல. கிரிக்கெட் உலகின் பரவலாக வோர்ண் பற்றிய செய்திகள் அதிர்ச்சி அலைகளைப் பரவவிட்டுள்ளன. ஸ்ரீவ் வோ, "எந்த நிலையிலும் அவருக்கு நான் ஆதரவாகவே இருப்பேன். எல்லோருமே பிழைகள் செய்பவர்கள் தான். ஆகவே, அவர் மீது கல்லெறிய யாருக்கும் உரிமை இல்லை" என்கிறார். அவர் இந்தத் துன்பத்திலிருந்து மீளக்கூடிய சக்திவாய்ந்தவர் என்று முடிக்கிறார் ஸ்ரீவ் வோ.

இன்னொருவர் டீன் ஜோன்ஸ்- அற்புதமானதொரு அவுஸ்திரேலிய அணி வீரராக இருந்தவர். 'வோர்ண் உயர்வான கிரிக்கெட் வாழ்க்கையை வீணாக்கிக்கொண்டாரே' என்று கவலைப்படுகிறார். இன்னொருபுறம் ஷேன் வோர்ணின் சகோதரர் - நாங்கள் எப்பொழுதுமே ஊடகத்துறையை மதித்தே வந்தவர்கள். தற்போதைக்கு எங்கள் தனிமையில் குறுக்கிடாமல் இருக்கிறீர்களா என்று ஊடகத்துறையினரை மிக விநயமாக வேண்டிநிற்கிறார். இன்னமும் வோர்ண் மீதான இறுதிப் பகுப்பாய்வு முடிவு காணப்படவில்லை. இறுதி முடிவுகள் வரும்போது மீண்டும் தனது தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை மீளப்பெற்ற இந்தியத் தடகள வீராங்கனை சுனிதா ராணி மாதிரி தூய்மையானவராகக் களத்தில் நுழையவும் கூடும், யார் கண்டது.

இது ஒரு புறம் இருக்க, இன்னொரு அதிர்ச்சிச் செய்தி ஜொன்ரி ரோட்ஸ் பற்றியதாகும்.

கென்யாவுடனான ஆட்டத்தின் களத்தடுப்பின்போது கையை முறித்துக் கொண்டவர். தான் இச்சுற்றுப் போட்டியுடன் கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தவர். ஆனால், அந்த நிலை சற்று முன்னதாகவே ஏற்பட்டதைப் பற்றிக் கவலைப்படுகிறார் (கவலை அவருக்கு மட்டுந்தானா?) இவர் மூன்று வாரங்களில் குணமடைவார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அதன் பின்பும் இவர் விளையாடுவாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.




பறக்கும் மனிதன் ரோட்ஸ்.

இதனிடையே மிகுதிப் 15 பேரில் ஒருவரான கிரீம் சிமித்தை முறைப்படி அணிக்குள் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தென்னாபிரிக்காவிற்கு இவரின் இயலாமை இருவகை இழப்பு. ஏனெனில், தென்னாபிரிக்க சர்வதேச ஹொக்கி அணியிலும் இவர் ஒரு அங்கத்தவர்.

என்றாலும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு இந்த நேரத்தில் ஷேன் வோர்ண் மற்றும் ஜொன்ரி ரோட்சின் இயலாமை என்பது ஒரு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். இந்த இருவரது பெயரையும் உச்சரிக்காத, அறியாத எந்தவொரு கிரிக்கெட் ரசிகரும் இருக்க முடியாது. இருவரும் MEGA STARS.

- ஜோஸப் கிருஷ்ணா.



பந்தைத் தடுப்பதில் அசகாயசூரன் ரோட்ஸ்.




Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# கணினி மென்பொருள் உருவாக்கும் வளம் எமது தமிழ் மாணவர்களிடம் உள்ளது!

## கணினிப் பயிற்சி நிறுவன ஆண்டு விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பப் புரட்சி உலகளாவிய அனைத்து கல்விசார் நிறுவனங்களினது நோக்கம், அறிவு சார் சமூக அமைப்புக்களைக் கட்டி எழுப்புவதேயாகும். இந்த அறிவுசார் சமூகத்திலே மேலோங்கி நிற்பது தகவல் தொழில்நுட்ப அறிவேயாகும். அந்த வகையிலே, இன்று யாழ். மண்ணிற்கு நாம் சுமார் 840 தகவல் தொழில்நுட்ப அறிவுசார் வல்லுநர்களை வழங்கியிருக்கின்றோம் என ஐ.ஐ.எஸ். கணினிப் பயிற்சி நிறுவன ஆண்டு விழாவில் உரையாற்றிய நிறுவன இயக்குநர் விக்னேஸ் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும்-

எமது மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஓரளவு தயார்ப்படுத்தப்பட்டிருப்பதால் இன்றைய சமாதானச் சூழலில் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த பதவிகளை எமது மாணவர்கள் தட்டிச் செல்கின்றார்கள்.

இல்லையேல் இச்சந்தர்ப்பங்கள் அனைத்தும் இவர்களுக்குக் கைநழுவிப் போயிருக்கும். எமது மாணவர்கள் வகிக்கவேண்டிய பதவிகள் தெற்கிலிருந்து நிரப்பப்பட்டிருக்கும்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் கணனி மென்பொருட்களை உருவாக்கக்கூடிய வளம் எமது தமிழ் மாணவர்களிடையே உள்ளது. எமது மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பத் துறையில் இருக்கிற ஆர்வம், அவர்களுடைய அணுகுமுறை, அவர்களுடைய திறமை, அவர்களுடைய கடினமான உழைப்பும், முயற்சியும் எமது மண்ணிற்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஓர் சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினை எமக்கு ஊட்டுகின்றது.

இது நாம் நீண்டகால அனுபவத்தினூடாகக் கண்ட உண்மையாகும்.

எமது திறமைமிகு மனிதவளத்தினை முழுமையாகப் பயன்படுத்தி, எமது எதிர்கால தாயகத்தின் பொருளாதாரக்கட்டமைப்பிலே தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பாரிய மாற்றத்தினைக் கொண்டுவர முடியும்.

எமது எதிர்கால ஆட்சியாளர்களிடம் நாம் வேண்டிக் கொள்வது தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த அமைப்புக்களுக்கு ஊக்கமளியுங்கள், சந்தர்ப்பத்தைத் தாருங்கள் என்பதேயாகும்.

தகவல் தொழில்நுட்பத்தினை முழுமையாகப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஓர் பொருளாதாரக் கட்டமைப்பு உருவாக்கப்படுமேயானால், அந்தப் பொருளாதாரக் கட்டமைப்பு எமக்கு மிகப்பொருத்தமானதாகவும், ஒரு நீண்ட ஸ்திரமான பொருளாதாரக் கொள்கையாகவும் இருக்கமுடியும்.

எமது அனைத்து வளங்களும் தகவல் தொழில்நுட்பத்தின் பக்கம் திருப்பிவிடப்படுமேயானால், தகவல் தொழில்நுட்பத்துறையில் தெற்காசியாவில் ஓர் முக்கிய இடத்தினை குறுகிய காலத்தில் அடைய முடியும். இலங்கையின் 'சைபர் சிற்றி' யாக யாழ்ப்பாணம் விளங்க வேண்டும்.

- என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சைக்கிள்-உழவு இயந்திர விபத்து இளவாலையில் சிறுவன் பலி!

(யாழ்ப்பாணம்)

இளவாலை மல்லியடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பி.ப. 2.20 மணியளவில் சைக்கிள் - உழவு இயந்திர விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். சைக்கிளில் இரு சகோதரர்கள் உழவு இயந்திரத்துடன் மோதுண்ட சமயம் சைக்கிளில் பயணம் செய்த ரவீந்திரன் சுதந்திரன் (வயது 6) என்னும் சிறுவனே உயிரிழந்தான்.

சைக்கிளை ஓட்டிவந்த இவரது சகோதரன் எதுவித காயங்களுமின்றி தெய்வாதீனமாக உயிர்தப்பினார். (71)

## காய்ச்சலினால் பெண் மரணம்

(கொழும்புத்துறை)

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த 10 நாட்கள் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, நீர்வேலியைச் சேர்ந்த கார்த்திகேசு ராசாத்தி (வயது 41) என்பவரே கடந்த 13 ஆம் திகதி உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (60)

# நிவாரண விநியோகம் மீண்டும் மாதம் ஒரு தடவை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச உலர் உணவு நிவாரண விநியோகம் மீண்டும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

மேற்படி உலர் உணவு நிவாரண விநியோகம் தற்போது இரு வாரங்களுக்கு ஒருதடவை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விநியோகத்தை முன்னர் போல் மீண்டும் மாதாந்த அடிப்படையில் வழங்குவதற்கு யாழ். செயலகம் தீர்மானித்துள்ளது. (க)

# புன்னாலைக்கட்டுவனில் இடம் மாறும் படைமுகாம்!

(ஊரெழு)

புன்னாலைக்கட்டுவனில் பலாலி வீதிக்குச் சமீபமாகப் புதிதாகப் படைமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

புன்னாலைக்கட்டுவனில் தற்போது தனியார் வீடொன்றில் அமைந்திருக்கும் முகாமை, இடம் நகர்த்த வேண்டியுள்ளதாலேயே மேற்படி பகுதியில் புதிய முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (96)

# பயண மார்க்கத்தை மாற்றியுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருட்களைக் கடத்துகின்ற குழுவினர், தமது கடல்வழிப்பாதையை மாற்றியமைத்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தூத்துக்குடியிலிருந்து- இலங்கையின் வடமேற்குக் கரையிலுள்ள தொடுவாவப் பகுதிக்குக் கடல்வழிப்பயணங்களை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த ஐந்து மாதங்களாகக் கடத்தல்காரர்கள் இந்தப் பாதையை மாற்றியுள்ளனர். தற்போது இராமேஸ்வரத்துக்கும், மன்னாருக்கும் இடையில் இத்தகைய கடத்தல் போக்குவரத்துக்கள் இடம்பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தடுக்கக் கரையோர ரோந்து நடவடிக்கைகளைப் பொலிஸார் அதிகரித்துள்ளனர். இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாகப் போதைப்பொருட் கடத்தல் குறைவடைந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS இரத்தின கோபால்ஸ்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

63, 65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 222 2938

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.



மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------
வயது: ----------
முகவரி: ----------



சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

தாம்இன் புஉறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்று அறிந்தோர்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தடமறிந்து நடைபோட...

கணினிக் கல்வியிலும், தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதிலும் யாழ். மாணவர்களிடையே ஆர்வம் மிகுந்திருந்தாலும், மிகச் சரியான வழிகாட்டல் அவர்களுக்குக் கிடைக்காமலிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கணினிக் கல்வி நிறுவனங்கள் தெருவுக்குத் தெருவென அதிகரித்துவரும் சூழல் நிலவுகின்ற போதிலும் அவை வழங்கும் பயிற்சிகளின் தரமும், சான்றிதழ்களின் அங்கீகாரமும் - கேள்விக் குறியாகவே அமைந்துள்ளன.

மாணவர்களும் இதைப்பற்றிக் கவலைப்படாது - சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்குடனும், கணினிக்கல்வி கற்றுவருவதான 'கௌரவத்தை'க் காத்துக்கொள்வதாகவுமே கணினி நிலையங்களுக்குச் செல்வதையும் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி உலக ளவில் வெகு துரிதமாகவும், மிகப்பரந்ததாகவும் வளர்ந்து வருகின்றபோது. எம்மவர்கள் 'சான்றிதழ்'களில் மாத்திரம் மோகம் கொண்டு நிற்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவது கட்டாயமாகின்றது.

அண்மையில் யாழ்.மாவட்டத்தில் பிரபல நிறுவனமொன்றில் நடைபெற்ற நேர்காணலொன்றுக்கு - கணினி அறிவுடையோர் தேவை என அறிவிக்கப்பட்டிருந்தபோது - பெருந்தொகையானவர்கள் அந்நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தனர்.

அவர்கள் தம்வசம் எடுத்துவந்த சான்றிதழ்களும் அவர்கள் குறிப்பிடத்தக்க கணினி அறிவைப் பெற்றிருந்ததாகவே தெரிவித்தன.

ஆனால் - நேர்முகப்பரீட்சை முடிந்து அவர்களை பயிற்சி வழியாகப் பரீட்சித்தபோது அநேகர் விசேட தரத்துடன் சித்தியடைந்திருந்த பாடப் பரப்புக்களிலேயே செயன்முறைத் திறனைக் காட்ட முடியாதிருந்தது பெரும் அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.

இங்கு அந்த மாணவர்களை நோவதா? அல்லது அவர்களுக்குக் கல்வி தந்த கணினி நிலையங்களைக் கடிந்து கொள்வதா என்ற திண்டாட்டமே - செயன்முறையைப் பரீட்சித்தவர்களுக்கு ஏற்பட்டது.

இச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. யாழ்ப்பாணத்தில் கணினி அறிவைப் பெறும் வழிமுறை எவ்விதமான நிலையிலிருக்கிறது?, எவ்வளவு தூரம் அது சான்றிதழ் நோக்கியதாக, வர்த்தக மயப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை உணர்த்துவதாகவே இந்தச் சம்பவம் இருந்தது.

உண்மையில் - கணினி தொடர்பான கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் - எத்தகைய நோக்கத்திற்காக தமக்கு அக்கல்வி தேவைப்படும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டே, தகவல் தொழில்நுட்பப் பரப்பினுள் நுழைய வேண்டும்.

கணினி பற்றிய அறிமுகமும், தமது எதிர்கால உயர்கல்விக்கான அல்லது தொழில் வாய்ப்புக்கான கணினி அறிவுமாகத் திட்டமிடப்பட்ட முறையில் - தகவல் தொழில்நுட்பப் பரப்பினுள் நுழைவதன் மூலம் - தமது பணத்தை மீதப்படுத்துவதுடன், கவர்ச்சிகரமான, தொகுதி தொகுதியான கணினிக் கல்வி மாயையிலிருந்தும் தெளிவடையலாம்.

அதேவேளை - யாழ்.குடாநாட்டில் இயங்குகின்ற கணினி நிறுவனங்களும் - கொழும்பில் இயங்கிவரும் வியாபார மையங்களாகிவிட்ட் கணினி நிறுவனங்களைப் போலல்லாது - மாணவர்களுக்கான வழிநடாத்தலை நேர்மையாகவும், இதயசுத்தியுடனும் வழங்க முன்வர வேண்டும்.

அது மட்டுமல்லாது - யாழ்.பல்கலைக்கழகமும் தனது வளாகம் கடந்த சேவையை, ஆலோசனைகளை - மாணவர்களுக்கு வழங்க முடியுமானால், அது பெரும் வாய்ப்பானதாகவும் அமையும்.

எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள கல்வியியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் தன்னார்வ அமைப்புக்களும், கணினி நிறுவனங்களும் இணைந்து கணினிக்கல்வி பற்றியும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி - வாய்ப்புக்கள் தொடர்பாகவும் - விழிப்புணர்வும், வழிகாட்டுதலும் தரவல்ல கருத்தரங்குகளை, கலந்துரையாடல்களைத் தர முன்வரலாமே.....?

# மட்டு. வடமுனை, தரவைப் பகுதிகளில் அடிப்படை வசதியற்று வாழும் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வடமுனை, தரவை ஆகிய பகுதிகளில் மீளக்குடியமரும் மக்கள் எந்த அடிப்படை



குடியேறியும் வசதி கிடைக்காத குடும்பம் ஒன்று.

வசதிகளும் இல்லாதநிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

1990 களில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் - வடமுனை, தரவை ஆகிய பகுதிகள் இராணுவத் தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டன. கொழும்பு - மட்டக்களப்பு வீதியை அண்டியுள்ள இந்தப்பிரதேசத்தில் இராணுவத்தினரின் தாக்குதல்களால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன், குடும்பிமலையை அண்டிய பகுதியாக இருப்பதால் இப்பகுதி மீது அடிக்கடி விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் இப்பகுதி மக்கள் உயிரிழக்கவும், பொருளாதார வளத்தை இழக்கவும் நேரிட்டது. இவர்களின்



பற்றை மண்டிக்கிடக்கும் வயல்வெளி.
தூரத்தே தெரிவது குடும்பி மலை.

விவசாய, கால்நடை வளங்கள் பெரிதும் அழிக்கப்பட்டன.

இதனால், இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்து வந்தனர். வடமுனை, தரவை ஆகிய பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தபின்னர் இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறி வருகின்றனர்.

ஆனால் இவர்களுக்கு எந்த அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. விவசாயத்தை நம்பி வாழும் இப்பகுதி மக்களுக்கு, அதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. அறக்கொட்டி ரக நெல்லைப் பயிரிடும் இந்தப்பகுதி விவசாயிகளுக்கு, அதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

களைத்தாக்கம், கிருமிநாசினியின்மை போன்ற பிரச்சினைகளால் வயல்களில் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பகுதியில் ஓடும் மந்தாரை ஆறு என அழைக்கப்பட்ட ஆறு, இப்போது மாதுறு ஓயா எனப் பெயர் மாற்றப்பட்டு, அதனை அண்டிச் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொலனறுவையை அண்டியுள்ள இப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களாலும் மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிக் காடுகள், கன்னிக் காடுகள் என அழைக்கப்படும் - மனிதர்கள் உட்புகாத காடுகளாக இருப்பதால் -



கிரானில் - மந்தாரை ஆற்றில் பயணம்.

இந்தப் பகுதிகளில் படையினர் பதுங்கியிருக்கலாம் என்ற அச்சத்தில் பொதுமக்கள் செல்ல அஞ்சுகின்றனர்.

இப்பகுதி மக்களுக்குப் போக்குவரத்துப் பெரும் பிரச்சினையாக உள்ளது. ஆற்றைக் கடந்துசெல்வது பெரும் ஆபத்தான பயணமாகவே இருந்து வருகின்றது. உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் சுழிகள் நிறைந்த இந்த ஆற்றில், பாதுகாப்பாகப் பயணிப்பதற்கான வசதிகள் இல்லை.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கவில்லை என்பதும், இதனால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பலத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காசநோயின் பாதிப்பு வீதம் இலங்கையில் அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் ஏழாயிரம் பேர் காசநோய்ப் பாதிப்புக்குள்ளாவதாகக் காசநோய்த் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இலங்கையில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாகக் கண்டி வெலிசறையில் உள்ள காச நோய்த்தடுப்புப் பிரிவு மருத்துவரான அனோமா சிறீவர்த்தன தெரிவிக்கையில்,

இலங்கையில் காசநோய்க்கான உரிய தடுப்பு மருந்துகள் கிடைப்பதில்லை. பல வகையான காசநோய்கள் இங்கு இருக்கின்றன. ஆனால், இவற்றைக் கண்டுபிடிப்பதில் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. இதனால் சிகிச்சை முறைகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

காசநோயை சரியாக இனங்காணுவது 50 சதவீதமாகவே உள்ளது. இங்குள்ள வசதிகள் போதுமானவையாக இல்லாததால் உரிய சிகிச்சைகளை வழங்க முடியாதுள்ளது.

இலங்கையில் வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் காசநோயின் தாக்கம் அதிகமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காசநோய் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு காசநோய்த் தடுப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# வட-கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு ஜூன் 23 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும்

## அமைச்சர் அலிக் அலுவிகார அறிவிப்பு

(கொழும்பு)

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

வட-கிழக்குப் பகுதியில் உள்ள 53 உள்ளூராட்சிசபைகளிலும் பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் இவற்றுக்கு ஜூன் மாதம் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே, இரண்டு முறை தேர்தல்களை ஒத்திவைத்தலால் மீண்டும் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் தனக்குக் கிடையாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க, வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது குறித்து அரசின் நிலைப்பாடு தமக்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# யுத்தத்தில் இலங்கையால் எப்படி வெற்றிபெற முடியும்?

## பௌத்த பிக்கு கேள்வி

அமெரிக்கா தனது முப்படைப் பலத்தையும் வியட்னாமில் பயன்படுத்தியபோதும், யுத்தத்தில் வெற்றி பெறமுடியவில்லை. அதுபோலவே இலங்கைப் பிரச்சினையிலும் யுத்தத்தின் மூலம் அரசினால் தீர்வுகாணமுடியாது.

சமாதானப் பேச்சுக்கள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என அட்டமஸ்தான பல்லேகம சிறினிவாச தேரர் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளமையாலேயே மக்கள் நிம்மதியாக, ஒற்றுமையாக வாழமுடிகின்றது.

இந்தநிலை தொடரவேண்டும். வியட்னாம் யுத்தத்தில் அமெரிக்காவாலேயே வெற்றிபெற முடியாதுபோனது. இலங்கையால் மட்டும் யுத்தத்தில் வெற்றிபெற முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சர்வதேச கணக்காய்வு நிறுவன கிளை யாழ்ப்பாணத்தில் திறப்பு

சர்வதேச ரீதியில் மிகப்பெரிய நான்கு கணக்கியல் நிறுவனங்களில் ஒன்றான கே.பி.எம்.ஜியின் முழு அங்கத்துவ நிறுவனமான கே.பி.எம்.ஜி போர்ட் தோன்ரன் அன்ட் கோ தமது கிளை நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் சர்வதேச தரமுடைய கணக்கியல், கணக்காய்வு, வரியியல் மற்றும் நிதி நிர்வாகம் சம்பந்தமான சேவைகளை இப்பிரதேச மக்கள் பெறக்கூடியதாக இருக்கும் என இந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இக்கிளை - வியாபார நிறுவனங்களின் கணக்கியல் பதிவேடுகளைப் பரிசீலித்தல் அவற்றைக் கணக்காய்வு செய்தல், வருமான வரி மற்றும் நிதியியல் ஆலோசனைகள் போன்ற சேவைகளை யாழ்ப்பாணத்தில் வழங்கவுள்ளது.

# இராணுவத்தின் செல்வாக்கைப் பெற முனைந்து செயற்படும் சந்திரிகா!

நெடுந்தீவு கடற்பரப்பில் இடம் பெற்ற சம்பவம் கடந்த வாரத்தில், தென்னிலங்கை அரசியலில் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகப் பேசப் பட்டது.

அரசாங்கம், இந்தப் பிரச்சினையைப் பேர்ளினில் வைத்து ஓரளவு தீர்த்துக்கொள்ள முற்பட்டபோதும், அரசாங்கத்தின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனை பெரிதுபடுத்துவதிலேயே முனைப்பாக செயற்பட்டார். ஏற்கனவே இராணுவத்திலிருந்து தமக்குப் புலனாய்வு அறிக்கைகள் கிடைத்து வருவதாகக் கூறி வந்த ஜனாதிபதி, இராணுவத்தில் தமக்கு ஒரு பிரிவினர் விசுவாசமாகச் செயற்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதில் எந்தளவு உண்மை இருக்கிறதோ, இல்லையோ ஜனாதிபதி இராணுவத்தினரின் செல்வாக்கைப் பெறுவதில் முனைப்பாக இருக்கிறார் என்பது உண்மையாகும். நடைமுறையில் போர் நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடித்துவரும் படையினரையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒருங்கிணைக்கும் உரிமை, நாட்டின் தலைவியாக இருந்தாலும், ஜனாதிபதியிடம் இல்லை.

எனினும், அந்தப் பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரம் தங்கிவிடக்கூடாது என்பதில் ஜனாதிபதி குறியாக இருக்கிறார். இதனை மையமாகக்கொண்டே ஜனாதிபதி தமது அரசியல் நகர்வை இராணுவத்தினரின் சார்பாகத் திசைப்படுத்திக் கையாள்கிறார்.



இம்தியாஸ்

இவரின் இந்த நகர்வுக்கு ஆரம்பத்தில் ஆதரவு கிடைக்காத போதிலும், தற்சமயம் ஒரு பிரிவு படையினர் மத்தியில் சாதகமான நிலை காணப்படுகின்றது. கடற்படை ஏற்கனவே போர்நிறுத்த உடன்பாட்டு விடயங்களில் முரண்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டது.

இராணுவம் ஆரம்பத்தில் மாறுபட்ட செயற்பாடுகளை மேற்கொண்ட போதும், பின்னர் வந்த காலப்பகுதியில் இயல்புப் போக்கை அமுல் செய்துவந்தது.

எனினும், நெடுந்தீவு மற்றும் மானிப்பாய் பிரச்சினைகள் இரண்டுமே படைத்தரப்பின் ஒரு பிரிவினர் சமாதானத்தின் எதிர்த்திசையையே நோக்குகின்றனர் என்ற வெளிப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறது.

ஆரம்பத்தில் போர்நிறுத்த உடன்பாட்டை இரண்டு தரப்பினரும் ஏற்றுக்கொண்டு செயற்படுத்தி வந்தமை, ஒவ்வொரு கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் இருதரப்பினரும் எதிர்பாராத வகையில் தீர்வு, திருப்பங்களை எட்டியமை என்பன ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செல்வாக்கை உயர்த்திவிடுமோ? என்ற அச்சம் ஜனாதிபதிக்கும், அவரின் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஏற்படுத்தியது.

இதன் விளைவே ஜனாதிபதியை, அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளைச் செய்வதற்கு வழிவகுத்தது. இதற்காக அவருக்குக் கிடைத்த "ஒரே துரும்பு" போர்நிறுத்த உடன்படிக்கையாகவே இருந்தது. எனவே ஜனாதிபதியின் முழுப்பார்வையும் அதில் செலுத்தப்பட்டது, இன்றும் செலுத்தப்பட்டு வருகிறது.

'ஜனாதிபதியின் இவ்வாறான செயல்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அலட்சியப்படுத்துவதைப் போலக் காட்டிக்கொண்டாலும், முன் னெச்சரிக்கையுடனும் நடந்துகொள்கிறது.

தமது தரப்பில் பிரச்சினைக்கான காரணம் இருக்குமானால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றுக்குத் தயாராகிவிடுவார். இதன்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இந்த நிலைமை தொடர்ந்து வருகின்ற நிலையில்தான் நெடுந்தீவுக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயிரிழப்புக்கள் இடம்பெற்றன.

இதன்போது தமது அதிகாரத்தைப் பயன்படுத்த எண்ணிய ஜனாதிபதி- பாதுகாப்பு அமைச்சருக்குச் சில பணிப்புரைகளை விடுத்திருந்தார்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் தடுக்கப்பட்டதாகக் கூறப்படும் போராளிகளிடம் எழுத்து மூலமான உறுதிமொழியைப் பெற்ற பின்னர், அவர்களை விடுதலை செய்யுமாறு அவர் அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்டிருந்தார்.



எனினும், திலக் மாரப்பன இந்த உத்தரவை மீறிவிட்டார் என ஜனாதிபதி குற்றம் சுமத்தியிருந்தார். அதேநேரம் நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பான தமது கருத்துக்களை ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிழையான கோணத்தில் திரிபுபடுத்தினார் எனவும் ஜனாதிபதியினால் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நிகழ்வுக்கள் யாவும் முடிந்ததன் பின்னர் கடந்த வாரமுற்பகுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச்சபை கூடியது.

இதில் ஜனாதிபதி ஏதோ காரணத்தினால் பங்குகொள்ளவில்லை. மங்கள சமரவீர, மஹிந்த ராஜபக்ஷ, சரத் அமுனுகம மற்றும் நிமால் சிறிபால டீ சில்வா ஆகியோர் பங்கு கொண்டனர்.

ஜனாதிபதியின் பணிப்புரைகளுக்கு எதிராகச் செயற்பட்ட திலக் மாரப்பன மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் என இதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இருவரிடமும் விளக்கம் கோரவேண்டுமென இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அதேநேரத்தில், நாட்டைத் தாரை வார்த்துக் கொடுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை "வீட்டுக்கு அனுப்புவோம்" என்ற போராட்டத்தை எதிர் வரும் மார்ச் முதல் வாரத்தில் இருந்து முன்னெடுப்பது எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச் சபை தீர்மானம் எடுத்தது.

- எதிர்வரும் 17 ஆம் திகதி "ஜனகோஷா" என்ற பெயரில் அரசுக்கெதிராக நாடு முழுவதும் போராட்டங்களை முன்வைப்பது.
- எதிர்வரும் 22 ஆம் திகதி போர்நிறுத்த உடன்படிக்கையின் ஒருவருட நிறைவு தினத்தை கறுப்பு தினமாகப் பிரகடனம் செய்வது.

போன்ற தீர்மானங்களும் அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்டன. மறுபுறத்தில் - மக்கள் விடுதலை முன்னணியும், எதிர்வரும் 20 ஆம் திகதியன்று நாட்டில் பொருட்களின் விலை உயர்வுகளைக் கண்டித்து அலரிமாளிகைவரை பேரணியொன்றை நடத்துவது எனத் தீர்மானம் மேற்கொண்டது.

இவ்வாறு முடிவெடுக்கும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அலரி மாளிகையில் கூடியது.

இதில் நாட்டின் அடுத்த பிரதமர் நிலைக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரமவை நியமிப்பது எனப் பிரதமமந்திரி ஆலோசனை தெரிவித்தார்.

இன்னும் இரண்டு வருடங்களுக்குள் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதியாகத் தாம் தெரிவுசெய்யப்பட்டவுடன், பிரதமர் நிலைக்கு மலிக் சமரவிக்கிரமவே பொருத்தமானவர் எனப் பிரதம மந்திரி அங்கு குறிப்பிட்டார். பிரதமரின் இந்த ஆலோசனை அந்த நேரத்தில் பிரதிபலிப்புக்களை உருவாக்காவிட்டாலும், பின்னர் அதன் பிரதிபலிப்பு வெளியிடப்பட்டது.

அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ் மற்றும் எஸ்.பி.திசநாயக்க ஆகிய இருவரும் பிரதமரின் இந்த ஆலோசனைக்கு உடன்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகின. ஜனாதிபதியின் கட்சியிலிருந்துவந்து ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை உருவாக்கி, அதனை அரசாங்கக் கட்சியாக மாற்றியமையில் ஜி.எல்.பீரிஸுக்கும், எஸ்.பி.திசநாயக்கவுக்கும் பெரும் பங்குண்டு. இந்த நிலையில் தமக்குள் ஒருவருக்கே அடுத்த பிரதமர் நிலை வழங்கப்பட வேண்டும் என இவர்கள் இருவரும் தமது ஆதரவாளர்களின் மத்தியில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கை அரசியலில் அண்மையில் பேசப்பட்ட விடயம், இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுஷி அகாஷியை இலங்கை அரசாங்கம் தமது வெளிவிவகார ஆலோசகராக நியமிக்கவிருப்பதாக வெளியான செய்தியாகும்.

இந்தத் தகவல் ஊடகம் ஒன்றில் வெளியான அடுத்த கணமே, ஜனாதிபதி- பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார். இலங்கை சிறிய நிலப்பரப்பைக் கொண்ட நாடாக இருந்தாலும், அதற்கென வரலாற்று ரீதியான வெளிநாட்டுக் கொள்கை இருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வெளிநாட்டவர் ஒருவர் வரலாற்றில் முதன்முறையாக இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார ஆலோசகராக நியமிக்கப்படுவது எந்த வகையில் நியாயம் என ஜனாதிபதி - பிரதம மந்திரியிடம் கேள்வியை தொடுத்திருந்தார். எனினும், பிரதம மந்திரி அதற்கு இதுவரை பதிலளிக்கவில்லை.

இது இவ்வாறிருக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான "கூட்டுச் சேர்தல்" பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தாம் சில இணக்கங்களைக் கண்டிருப்பதாக இரண்டு தரப்பும் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆம் ஆண்டில் முன்வைத்த "தீர்வுப் பொதியை" சில நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மக்கள் விடுதலை முன்னணி உடன்படலாம் என ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தமையை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக இருக்கும்.

இதேவேளை, இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்துக்கான முன்னெடுப்பை எடுப்பதில்லை என்ற தீர்மானத்தையும் எடுத்துள்ளன. தேசிய அரசாங்கம் எனும்போது முன்னுணர்த்தப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகிறது. ஹக்கீம் அணி, அதாவுல்லா அணி என்ற நிலைமை தற்சமயம் மாற்றம் பெற்றுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலைமையைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வழிநடத்தும் நிலை உருவாகியுள்ளது.



திலக் மாரப்பன

இதன் முதலாவது கட்டமே அண்மையில் முஸ்லிம் தேசப் பிரகடனம் செய்யப்பட்டமையாகும். இதனையடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளரெனக் கூறப்படும் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரைப் பதவி நீக்குமாறு மாணவர்கள், மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையும் நிறைவேறுமானால் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசப்படும் நிலைக்கு உயர்ந்து விடுவர்.

எனினும் - இவ்வாறான நிலைமை ஒன்றை முஸ்லிம் அரசியற்கட்சி தலைமைத்துவங்கள் ஏற்றுக்கொள்ளாது என்றே பெரும்பாலும் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்....

*

# எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்!

## ஞாயிறு நற்சிந்தனை

போலித்தனமான பல சந்தோஷங்கள் நமது வாழ்க்கையைக் கெடுதது விடுகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அடுத்தவரைக் கெடுப்பதில் ஒரு சந்தோஷம், அடுத்தவருக்கு எதிராகப் பேசுவதிலோ அதிக சந்தோஷம், அடுத்தவருக்கு என்ன நடக்கிறது என்பதை அறிவதில் ஒரு சந்தோஷம், அடுத்தவருக்குரியதில் ஆசைப்படுவதில் மற்றொரு சந்தோஷம்.

இது நமக்கு அவசியம்தானா? சில சமயம், நான் இப்படிப்பட்டவன் அல்ல. அடுத்தவரை நான் கெடுக்கிறவன் அல்ல என்று நம்மை நாமே நியாயப்படுத்தலாம். அப்படியானால் நமக்குள்ளே சந்தோஷமும், மனநிறைவும் உண்டா என்று கேட்டால், அதறகுப் பதில் என்ன?

கண்ணாடியிலேயே தமது முகத்தைப பார்க்காதவர்களே இல்லை. கண்ணாடி ஒன்றுதான் நமது முகம் எப்படிப்பட்டது என்பதை அது நமக்குக் காட்டுகின்றது. நாம் கண்ணாடியில் என்ன பார்க்கின்றோம்? நான் அழகா? நாம் அணிந்திருக்கும் உடை அழகா? முகம் மகிழ்ச்சியாக, பொலிவாக இருக்கிறதா? என்ற ஆவல் கொண்டுதானே பார்க்கிறோம்.

இது நல்லது. தேவையானது. ஆனால், ஒரு இறைபிள்ளையுடைய பார்வை சற்று வித்தியாசமானதாக இருக்கவேண்டும். தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது முக அழகை அல்ல, மனத்தின் அழகைப் பார்க்கவேண்டும்.

உடை அலங்காரத்தையல்ல, அன்புருவாகிய இறைவனின் கள்ளங்கபடமற்ற அலங்காரம் எம்மில் வெளிப்படுகிறதா என்பதைப் பார்கக வேண்டும். சந்தோஷத்திற்கு வேஷம் உதவாது. வேஷம் கலைய சந்தோஷமும் கலைந்துபோகும்.

நாம் ஒவ்வொருவரும் நம்மால் யாராவது துக்கப்படுகிறார்களா? நமது நாவின் வார்த்தைகளாலே மனநோவு அடைந்தார்களா? பழி வாங்கிவிட்டேன் என்று சந்தோஷப் படுகிறோமா? நமது முகத்தில் தெரிகிற மகிழ்ச்சி எப்படிப்பட்டது? என்று சிந்தித்திருக்கிறோமா?

ஏனெனில், மெய்யான மன மகிழ்ச்சி அடுத்தவரைக் கெடுப்பதில் அல்ல. அவனுக்குக் கொடுப்பதில், அவனை ஆசீர்வதிப்பதிலேயே நமக்குக் கிடைக்கிறது. இதுவே மாறாத மாசற்ற முகமலர்ச்சியைத் தரும்.

ஒரு விசுவாசியைப் பார்த்து - அதாவது, ஓர் இறைபற்றுள்ளவனைப் பார்த்து - இவன் எவ்வாறு, எப்படி இத்தனை சந்தோஷமாக இருக்கிறான் என்று பிறர் ஆச்சரியப்பட வேண்டும். எதிரி என்றாலும், பசிக்கு உணவும் தாகத்திற்குத் தண்ணீரும் கொடுப்பதிலேயே மெய்யான உளங்கனிந்த சந்தோஷம் உண்டாகும்.

ஆகவே - இந்த நாளில் எங்கெங்கே அடுத்தவனுடைய தாழ்ச்சியிலும், அடுத்தவனுடைய வீழ்ச்சியிலும் நாம் சந்தோஷமாயிருந்தோம் என்று ஆராய்ந்து, நம்மை நாமே வஞ்சித்தோமா? என்பதை அறிந்து அவற்றை இனங்கண்டு, கிறிஸ்துவுக்குள்ளும், உற்றார் - உறவினர் - நண்பர்கள் அனைவருக்குள்ளும் எப்பொழுதும் சந்தோஷமாக இருப்போம்.

அதுவே மாறாத சந்தோஷத்தைத் தரும். அதுவே ஆண்டவரை நம்மில் பிரதிபலிக்கும்.

சி.என்.ஹெய்ன்ஸ்




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## நான்கை பூஜ்யமாக்கிக் கொண்டவர்கள்

சிம்பாப்வே - இங்கிலாந்து இடையிலான ஒரு நாள் போட்டியின் மைதானத்தை மாற்ற இங்கிலாந்து விடுத்த கோரிக்கை, ICC ஆல் இறுதியும் முடிவுமாக நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிம்பாப்வேக்கு 4 புள்ளிகள் வழங்கப்பட்டன. இரண்டாவது ஆட்டமாக இன்று நெதர்லாந்தை இங்கிலாந்து சந்திக்கிறது.என்றாலும் களமிறங்கி ஆடப்போவது இன்றே முதல் முறை. இந்தியாவுடன் முதல் ஆட்டத்தில் கலந்து ஒரு தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்ட நெதர்லாந்துக்கு இது இரண்டாவது ஆட்டம். இந்தியாவைப்போலவே தட்டுத் தடுமாறித்தான் இங்கிலாந்து நெதர்லாந்தை வெல்லப் போகிறதா தெரியவில்லை. எனினும், வெற்றி இங்கிலாந்துக்கு என்று கூறலாம். இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசையில் டிரெஸ் கொதிக், மைக்கல் வகன், நிக்நைட் என்று திறமையான வரிசை ஒன்றிருக்கிறது. அதேபோல கெடிக், ஜேம்ஸ் அன்டர்சன், ஹேர்மிசன் போன்ற பந்து வீச்சு வரிசையும் உண்டு. VB சுற்றுக் கிண்ணத்தை இழந்தபின், முதன் முதலில் கலந்துகொள்ளும் மிகப் பெரிய கிண்ணத்தின் முதலாட்டம். பெற்றிருக்கக்கூடிய நான்கு புள்ளிகளை இழந்துநிற்பது உளவியல் ரீதியான ஒரு தாக்கத்தை இங்கிலாந்து அணிக்கு ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.


ஆடாமலேயே தோல்வி

அவர்களாகவே அவர்களுக்கு ஏற்படுத்திக்கொண்ட சுமையை அவர்களே இறக்கிக்கொள்ள வேண்டியதுதான். இந்த ஆட்டம் நடைபெறவிருக்கும் BUFFALO PARK கடற்கரையோர அழகான மைதானம். 2002 இல் முதன் முதலாக டெஸ்ட் ஆட்டம் அரங்கேறிய மைதானம். இது பந்துவீச்சாளருக்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்மலன்

## எப்படி, எதுவரை....!

அணிகள் எவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளைச் சந்திக்கப் போகின்றன. எந்தளவு தூரம் பயணம் செய்யப்போகின்றன. பலம், பலவீனங்கள் என்ன? இதோ ஒரு கணிப்பு. முதலில் இலங்கையைப் பார்ப்போம்.



*தலைவர் :* சனத் ஜயசூரிய.

*பயிற்றுநர் :* டேவ் வட்மோர்.

*குழு :* B - தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், கென்யா, கனடா.

*பலம் :* 7 வீரர்கள் 150 ஒருநாள் ஆட்டங்களுக்கு மேல் ஆடிய அனுபவத்துடன் ஒருநாள் ஆட்டத்தைக் கையகப்படுத்தியவர்கள். முரளிதரன் ஒரு பலம்.

*பலவீனம் :* வேகமான தடங்களில் சிரமப்படுவார்கள். தென்னாபிரிக்கா வேகமான தடங்களைக் கொண்டது. விக்கெட்டுக்களுக்கு இடையிலான ஓட்டவேகம் தளம்பல்நிலை. பந்துவீச்சில் சில வேளைகளில் நிதானம் இன்மை. களத்தடுப்பின் உயர்தரம் சிறிது குறைந்துள்ளமை.

*முக்கிய நபர்:* சனத் ஜயசூரிய. அவுஸ்திரேலிய VB முக்கோணத் தொடரின் இறுதியில் உயர்ந்த Form இற்கு வந்தவர். 100,100,99 என்ற எண்ணிக்கைகள். முதல் பந்தில் இருந்தே அதிரடி. முதல் 15 ஓவர்களில் அதிகபட்சமான ரன் எடுக்கும் ஆற்றல்.

*ஒருநாள் தரம்:* தாயகத்தில் உயர் தகைமை. அப்பால் அவ்வளவு சிறப்பல்ல. ஜூலை 98 இன் பின் தாயகச் சுற்றுப் போட்டிகளில் தோல்வி காணவில்லை. 2002 மொறாக்கோ கிண்ணம் வென்ற அணி. பின்னர் தென்னாபிரிக்காவில் ஒருநாள் தொடரில் தோல்வி. VB கிண்ணத்திலும் சோபிக்கவில்லை. 2002 இல் ICC சம்பியன். சிம்பாப்வே, இந்தியாவுடன் இணைச் சம்பியன்.

*முன்னைய உலகக்கிண்ணச் சாதனை :-* 1996 சம்பியன்.

99 உலகக் கிண்ணத்தில் முதல் சுற்றில் வெளியேற்றம்.

*எதிர்வுகூறல்:* சுப்பர் சிக்ஸிற்குள் மூன்றாவது அணியாக நுழையும்.

## Shauan Vs Stephen

இன்று THE WANDERERS, JOHANN-E U மைதானத்தில் G.M.T நேரப்படி காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்


பிளெமிங் - அமைதியான வெற்றி

நியூசிலாந்து எதிர் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டி மிகவும் பரபரப்பாக இருக்கப் போகிறது என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. முதலில் சில விடயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதல் போட்டியில் இலங்கை அணியுடன் கையைச் சுட்டுக்கொண்ட நியூசிலாந்து அணியின் நிலைமையைத் தவறாகப் புரிந்துகொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிர்ச்சித் தோல்வி கண்டது யாவரும் அறிந்ததே. அதேபோல், தென்னாபிரிக்க அணியும் மேற்கிந்திய அணியிடம் பரிதாபமாக 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்விகண்டது. இதில் ஒரு ஒற்றுமை என்னவென்றால், இவை மூன்றும் B பிரிவு அணிகள். நியூசிலாந்து அணியைப் பொறுத்தவரை இந்த அணியிடம் காணப்படுகின்ற முக்கிய குறைபாடு பொறுமையின்மை. அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் அணிக்குள் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியில் இருப்பது போன்ற தோற்றம் தெரிகிறது. இன்றும் நாதன் அஸ்ரல் போன்ற பல களம் கண்ட வீரர்கள் இருப்பது பலம். ஆனாலும் பந்து வீச்சுப் படையணியில் இருக்கும் சிறு ஓட்டை இந்த அணிக்குப் பலவீனம். ஆரம்ப ஆட்ட வீரர்களிடம் சில மாற்றங்களைச் செய்தால் என்ன என்று யோசிக்கும் அளவுக்கு இந்த அணித் தலைவர் இருக்கிறார் போலத் தெரிகிறது. ஷேன்பொண்ட், ஜேக்கப் ஓரம் போன்ற பந்து வீச்சாளர்கள் 15 ஓவர்களுக்குள் எப்படி லாவகமாக வீசுகிறார்களோ - அதே போல, 40 ஓவர்களுக்குப் பிறகும் பந்துவீசப் பழகிக் கொள்ள வேண்டும். அந்த அணி இன்று மேலும் ஒரு சாதாரண வேகப் பந்துவீச்சாளரைச் சேர்த்துக் கொள்வது நல்லது.


*பொல்லக் -*
நானும் ஒரு Batsman தான்.

தென்னாபிரிக்க கூடாரத்தில் ஒரு சிறிய சலசலப்பு தோன்றியுள்ளது. கடந்த ஒரு போட்டியின்போது (மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான) அணித்தலைவர் ஷேன் பொல்லக் விட்ட ஒரு இமாலயத் தவறு, அந்த அணியின் தோல்விக்கு வழிவகுத்தது. அவருடைய துடுப்பாட்ட ஒழுங்கு மிகவும் கேலிக்கூத்தானது. அது என்னவென்றால், லான்ஸ் குளூஸ்னரை அவர் கடைசியாக அதுவும், தான் துடுப்பாட்டத்துக்கு இறங்கிய பின்பு அனுப்பியதுதான். அன்று குளூஸ்னர் அடித்த ஐந்து MEGA SIX களும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்களுடைய வயிற்றில் புளியைக் கரைத்தது. ஏன் பொல்லக் இப்படிச் செய்தார்? இன்று இந்த அணிக்கு ஒரு பந்துத்தடுப்புக்குறை இருக்கும். ஏனெனில், உலகின் மிகச்சிறந்த பந்துத் தடுப்பாளராகிய ஜொன்டி ரோட்ஸ காயம் காரணமாக ஆடமாட்டார் என்பதுதான். இவருக்காகப் பெரும்பாலும் இன்று ஒரு துடுப்பாட்டக்காரர் தான் இறக்கப்படுவார் என நம்புகின்றோம். இந்த அணிக்கு சொந்த மைதானம் Plus Point. Batting ஒழுங்கு Minus point. இந்த மைதானம் பெரும்பாலும் தென்னாபிரிக்க அணிக்குச் சாதகமாகத்தான் இருக்கும். ஆனால், அணித் தலைவருடைய சில திருவிளையாடல்கள் நியூசிலாந்துக்கு வெற்றியைத் தேடித்தரலாம். இன்றைய ஆட்டத்துக்கு போட்டி நடுவராகக் கடமையாற்றுபவர் Wasim Raja. மற்றும் மைதான மத்தியஸ்தர்களாக S.A.Bucknor, P.Willey ஆகியோர் கடமையாற்றுகிறார்கள். மூன்றாவது நடுவராக D.J.Harper உம் நான்காவது நடுவராக J.Pickett உம் கடமையாற்றுகின்றனர். உலகக் கிண்ணக் கனவு, முதல் போட்டியில் சற்றுத்தடுமாறிய போதும் இரண்டாவது போட்டியில் அற்புதமாக ஆடி இன்று மூன்றாவது போட்டியில் ஆடும் தென்னாபிரிக்காவா? அல்லது இலங்கையிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு, மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் போராடி வெற்றி கண்டு, இன்று ஆடப் போகும் நியூசிலாந்தா? வெற்றி - out side blacks? or home greens?

PN.சுதர்சனி



ஆட்டநாயகன் ஜிலெஸ்பி, விக்கெட் சாய்த்த மகிழ்ச்சியில்.

### இந்திய - அவுஸ்திரேலிய ஆட்டத்திலிருந்து ...


மக்ராவின் பந்துக்கு சச்சின் திணறல்.


கில்கிறிஸ்டின் அதிரடி ஆட்டம்.


டிராவிட் வெளியே போனதை அடிக்க முனைந்து போல்ட்.


சிமண்ட்ஸ், கை.:.ப்பின் பிடியுடன்.



கங்கூலியின் அவுட்

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறந்த பந்துவீச்சுச் சாதனை யாரைச் சாரும்?

வின்ஸ்ரன் டேவிஸ் (மேற்கிந்தியத் தீவுகள்) Vs அவுஸ்திரேலியா
7/51 - 1983

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இந்தியா எதிர் அவுஸ்திரேலிய அணி

**இந்திய அணி**

| | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கங்கூலி | 9 | 21 | 1 | 0 |
| சச்சின் | 36 | 59 | 3 | 0 |
| ஷேவாக் | 4 | 4 | 1 | 0 |
| டிராவிட் | 1 | 23 | 0 | 0 |
| யுவராஜ் | 0 | 8 | 0 | 0 |
| கை.:.ப் | 1 | 16 | 0 | 0 |
| மொங்கியா | 13 | 39 | 1 | 0 |
| கும்ளே (ஆ.இ.) | 16 | 38 | 1 | 0 |
| ஹர்பஜன் | 28 | 32 | 4 | 0 |
| ஷாகிர்கான் | 1 | 9 | 0 | 0 |
| சிறீநாத் | 0 | 2 | 0 | 0 |
| உதிரிகள் | 16 | | | |

மொத்தம் 41.4 ஓவர்களில் சகல விக்கெட் இழப்புக்கு - 125

**அவுஸ்திரேலிய அணி**

| | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கில் கிறிஸ்ட் | 48 | 61 | 6 | 0 |
| ஹேடன் | 45 | 49 | 1 | 2 |
| பொன்டிங் | 24 | 24 | 4 | 0 |
| உதிரிகள் | 11 | | | |

மொத்தம் 22.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 128.

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| மக்ரா | 8 | 3 | 23 | 1 |
| லீ | 9 | 1 | 36 | 3 |
| ஜிலெஸ்பி | 10 | 2 | 13 | 3 |
| சிமண்ட்ஸ் | 6 | 0 | 25 | 0 |
| ஹொக் | 4.4 | 0 | 16 | 1 |
| லீமன் | 4 | 0 | 7 | 1 |

**பந்து வீச்சு - இந்திய அணி**

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| சிறீநாத் | 4 | 0 | 26 | 0 |
| ஷாகிர்கான் | 4 | 0 | 26 | 0 |
| ஹர்பஜன் | 7.2 | 0 | 49 | 0 |
| கும்ளே | 7 | 0 | 24 | 1 |

*நடுவர்கள் :* அசோக டீ சில்வா, ஷெப்பர்ட்
*மைதானம் :* சுப்பர் ஸ்போர்ட்ஸ் பார்க்.

உலகக் கிண்ண கிரிக்கெட்-2003 இல் நேற்று ஏழாவது நாள் போட்டியில் இந்திய அணியை 9 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலியா வென்றது.

*சிறப்பாட்டக்காரர் - ஜிலெஸ்பி (அவுஸ்திரேலியா)*

*இதுவரை அவுஸ்திரேலியா பெற்ற புள்ளிகள் - 08*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தனியார் மருந்தகங்கள்; புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு!

(யாழ்ப்பாணம்)

மருத்துவரின் மருந்துச் சிட்டையில்லாது, குறிப்பிட்ட சில மருந்து வகைகளை, மருந்தகங்கள் வழங்கக் கூடாது என யாழ். ஆங்கில மருத்துவ வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட சுகாதாரப்பிரிவுப் பொறுப்பாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரின் சார்பில் உணவு மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் இணைந்து மருந்தகங்கள் தொடர்பான சில தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு,

பதிவுபெற்ற மருந்தாளர் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு, மருந்தாளர் இல்லாத மருந்தகங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

மருந்தகங்கள் தொடர்ந்து புதிதாக ஆரம்பிப்பதைக் கட்டுப்படுத்தும்முகமாக, மருந்தாளர் இல்லாத விடத்து, தை மாதம் 2003 இல் இருந்து மருந்தகங்கள் திறப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

முன்னர் ஓர் இடத்திலிருந்து, பின்னர் வேறு இடத்திற்கு மாற்றினாலும், மருந்தாளர் இல்லாத விடத்து அது புதிதாகவே கருதப்படுவதால் அதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

மருந்தாளர் பயிற்சி நெறியினை சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியுடன் ஆங்கில மருத்துவ மன்றம் பொறுப்பெடுத்து நடத்தும்.

ஓர் உரிமையாளரின் கீழ் இரண்டு மருந்தகங்கள் இயங்குமாயின் அவற்றிலொன்றுக்கு பதிவு பெற்ற மருநதாளர் கடமையாற்ற வேண்டும்.

அரச உடமைப் பொருட்கள் (அரச முத்திரை பொறிக்கப்பட்ட மருந்துகள்), காலாவதியான மருந்துப் பொருட்கள் விற்பனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. குளிரூட்டியில் வைத்துப் பராமரிக்கும் பொருட்களை அதற்கேற்ப பராமரிக்க வேண்டும். அதனை விநியோகம் செய்யும்போது (வியாபார நோக்கம் இல்லாது) உரிய பாதுகாப்புடன் வழங்க வேண்டும்.

மருந்துகள் கொடுக்கும்போது, அதன பாவனை முறையைத் தெளிவாக எழுதிக்கொடுக்க வேண்டும். மருந்தகங்களில் மருந்துச்சிட்டைப் பதிவேடு (Prescription) முறையாகப் பேணப்பட்டிருக்க வேண்டும். கொள்வனவுச்சிட்டை பதியப்பட வேண்டும்.

மருந்தகங்களில் வேலை செய்பவருக்கான தகுதிகாண் வாய் மூலத் தெரிவில், தகுதியானவர்களே மருந்தகங்களில் கடமையாற்றவேண்டும். பயிலுநரையும், பயிற்றப்பட்டவர்களையும் இலகுவில் மக்கள் இனங்காண்பதற்கு சீருடையை மருந்தகங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து மருந்தகங்களும் 2002 ஆனி மாதத்திலிருந்து சந்தாவைச் செலுத்தி உறுப்புரிமை பெறப்பட வேண்டும் (ஏனைய வர்த்தக சங்கத்தில் அங்கம் வகிப்பது அவர்க ளின் விருப்பம்). ஆங்கில மருத்துவ மன்றத்தின் உறுப்புரிமையைப் பெறாது மருந்துகள் களஞ்சியப்படுத்துவதோ விற்பனை செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது.

மருநதகத்தின் விபரக் கொத்துப் படிவத்தினை பெற்று, அதை தமிழில் பூரணப்படுத்தி மூன்று படிவத்தினை மன்ற செயலாளரிடம் காலம் தாழ்த்தாது ஒப்படைக்க வேண்டும்.

மருந்தகங்களில் மருந்தக உரிமையாளரின் மனைவி, பிள்ளைகள் கடமையாற்றுவது, மருந்தக உரிமையாளரின் வீட்டில் வைத்து மருந்து விற்பது தடை செய்யப்பட்டுள் ளது என யாழ்.ஆங்கில மருத்துவ வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

# போராளிகள் மீதான தாக்குதல்; வவுனியா நகரிலும் பேரணி!



(வவுனியா)

மானிப்பாய் சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று வவுனியாவிலும் பொது மக்களின் பேரணி ஒன்று நடைபெற்றது. பேரணியின் இறுதியில், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இப்பேரணியில் பெண்கள் அதிகமாகக் கலந்துகொண்டிருந்தனர்.

குருமண்காடு சந்தியிலிருந்து ஆரம்பித்த பேரணி, மன்னார் ஏ-14 நெடுஞ்சாலையில் உள்ள வைரவப்புளியங்குளம் கண்காணிப்பு அலுவலகத்தைச் சென்றடைந்தது. இப்பேரணியில் கலந்துகொண்ட பெரும்பான்மையான பெண்கள் இடுப்பில் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

வவுனியா வெகுசன ஒன்றியச் செயலாளர் குகேந்திரன் மகஜரைக் கையளித்தார். தமிழ்க்கூட்டமைப்பு, தமிழ்க் காங்கிரஸ் மாவட்ட உறுப்பினர்களும் இதன்போது சமுகமளித்திருந்தனர்.

# அடுத்த வாரம் ஆயர்கள் குழு யாழ்ப்பாணம் வருகின்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களினதும் ஆயர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பல தசாப்த காலத்திற்குப் பின்னர், அடுத்த வாரமே கத்தோலிக்க திருச்சபையின் அனைத்து மறை மாவட்டங்களினதும் ஆயர்கள் கூட்டாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கும், அனைத்து ஆயர்களும், யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாக நிலைமைகளை நேரில் அவதானிக்க உள்ளனர்.

கடந்த 1992 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரால், புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்ட யோசப் வாஸ் முனிவரின், தேவாலயத்தைத் திறந்துவைக்கும் வைபவத்திலும், அனைத்து ஆயர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். கொட்டடியில் அமைக்கப்பட்டிருக்கும் இத்தேவாலயத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி திறந்துவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.(க)

## 2 பெண்...

போராளிகள், உப்புவெளிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் புலிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, திருமலை மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இவர்கள் மீதான குற்றச்சாட்டு தவறானது. உண்மைக்குப் புறம்பானது. இவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். இல்லையேல் நாளை பூரண ஹர்த்தால் நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிமன்ற வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களின்படி, போராளிகள் இருவார தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## பகுப்பாய்வு திணைக்கள தீ; மின்ஒழுக்கே காரணமாம்!

(கொழும்பு)

அரச பகுப்பாய்வுத்திணைக்கள தீ விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என, கொழும்புப் பகுதி பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தத் தீ அனர்த்தம் தொடர்பாக சி.ஐ.டி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திணைக்கள களஞ்சியப் பகுதியில் ஏற்பட்ட தீயினால், பல வழக்கு ஆவணங்கள் அழிந்துள்ளதாக அரச பகுப்பாய்வாளர் கே.சிவராஜா தெரிவித்தார்.

## முகமாலையில்...

களும் தீவிரமாக சோதனையிடப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வான் ஒன்றில் வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் முகமாலையில் வைத்து நீண்ட நேரமாக படையினரால் சோதனையிடப்பட்டனர். (ச)

## கிளாலிக்குள்....

தொடர்ந்து அவர்களை ஓட வேண்டாம் எனவும், அவர்களது கைகளை உயர்த்துமாறும் பெண்போராளிகள் சைகை செய்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது முன்னே ஆயுதங்களுடன்சென்ற இரு இராணுவத்தினரும் சூனியப்பிரதேசத்திற்குள் ஓடி மறைந்தனர்.

கைக்குண்டினை வைத்திருந்த மூன்றாவது இராணுவச் சிப்பாய் பெண் போராளிகளை நோக்கிக் கைக்குண்டை வீச முற்பட்டபோது, போராளிகள் திருப்பித் தாக்கியதில், குறிப்பிட்ட சிப்பாய் பெண் போராளிகளின் காப்பரணுக்கு அருகில் மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகங்களுக்கு புலிகளால் தகவல் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் யாழ். மற்றும் கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினரின் வேண்டுகோளுக்கு அமைய, இறந்த இராணுவச் சிப்பாயின் உடலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அரசாங்கத்திடம் இன்று காலை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை புலிகள் மேற்கொண்டதாக எமக்குத் தெரியவந்தது.

# ஊடகவியலாளர்களின் போராட்டம்; பொதுஅமைப்புகள் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மீதான படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து நாளை யாழ். செயலகத்தில் உள்ள தகவல் திணைக்களம் முன்பாக ஊடகவியலாளர்கள் நடத்தவுள்ள போராட்டத்துக்கு, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஏனைய பொது அமைப்புக்களும் இப் போராட்டத்தில் கலந்து கொள்ள ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

# ஜனவரியில் மீள்குடியமர்ந்தோர்; முதற் கொடுப்பனவு அவர்களுக்கே!

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஜனவரி மாதம முதலாம் திகதிக்குப்பின் மீள்குடியமர்ந்தவர்களுக்கே மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதன்படி, இதுவரை யாழ். மாவட்டத்தில் நானூறு குடும்பங்களுக்குக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான நிதி கிடைத்திருப்பதாகவும், முதற் கட்டமாக தென்மராட்சி, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்ந்தவர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிந்தியாவில் இருந்து



முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
◆கைரேகை ◆ஜாதகம் ◆எண்கணிதம்
◆பெயர் ராசி ◆திருமணப் பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்
பார்க்கும் நேரம்:- காலை 9.00 - மாலை 5.00மணிவரை
ராஜகுருசாமி
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1(112), TEMPLE RDAD (NEAR ICRC),
JAFFNA.
(சி-590)

YOGI HOME SCIENCE ACADEMY
புதிய வகுப்புக்கள் 21.02.2003 அன்று ஆரம்பமாக உள்ளன.
1. Fabric Painting (Special Course)
2. கிறிஸ்டல் அழகுப் பொருள் செய்முறை
3. முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும்
இதில் செய்முறைப் பயிற்சிகளுடன் இந்திய, கண்டிய, குஜராட்டி, மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி கட்டும் முறைகளும் பயிற்சியளிக்கப்படும்.
சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (247)

திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
கம்பன்மகன்
நாட்டுக்கூத்து நூல் வெளியீடு
காலம்:- இன்று 16.02.2003 ஞாயிறு
நேரம் :- மாலை 4.30 மணி
இடம் :- மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்
நூல் ஆக்கம்:- யோ.யோண்சன் ராஜ்குமார்
நிறைவு நிகழ்வாக யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள்
வழங்கும்
கும்பகர்ணன்
நாட்டுக்கூத்து இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/598) திருமறைக் கலாமன்றம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.